குமரகுருபரன்



மலர் 16] 1965-ஃ சித்திரை மீ 1௨ (13-4-65) [இதழ் 4

தனிப் பிரதி 13 நயா பைசா வருடச் சந்தா ரூ. 1½

உள்ளுறை

பக்கம்

1. தில்லைச் சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை கட்டுரை 12 ... 201
2. திருமந்திரம், ஐந்தாம் தந்திரம். (Tirumantiram Tantra the fifth) ... 207
3. திருவாசக அநுபூதி உரை ... 209
4. தென்னகக் கோயில்கள் ... 210
5. சிதம்பர இராமலிங்க சற்குரு புலம்பற்கண்ணி 215
6. தாயுமானவர் – பராபரக்கண்ணிகள் 216
7. சேக்கிழார் 217
8. துணைமாலையம்மை பிள்ளைத்தமிழ்க் கவிநயம் 225
9. தமிழன் வல்லமை 227
10. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் அற்புதத் திருப் பதிகங்கள் 228
11. சமுதாயக் கவிஞன் ... 230
12. யான் கண்டவாறே....... ... 233
13. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்-உரை நடை 239
14. பந்தங்கள் தீர்ப்பான் கோயில் ... 241
15. சிவபோக சாரம் அறியும் பகுதி 242
16. Hymns of the Tamil Saivite Saints ... .244
17. திருத்தணிகையிற் புனற்பந்தர் நிதி 245

உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை



மலர் 16	விசுவாவசு-ஹு சித்திரைத் திங்கள் 1-ம்வ [13-4-65]	இதழ் 4

தில்லைச் சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை

(கட்டுரை 12)

தொண்டைமண்டலாதீனம் மகாசந்நிதானம்

சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள்

ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயம்,

காஞ்சிபுரம்.

நேரிசைவெண்பா

"அண்டந் திருமேனி யம்பலத்தார்க் கென்பதுரை
கொண்டங் குணர்தல் குறைபாடே—கண்டளவில்
விண்ணும் பொலிந்ததொரு மின்கொடியே சொல்லாதே
வண்ணம் பொலிந்திருந்த வா." (11)

இதிற் கூறப்பட்ட பொருளாவன :— (1) அம்பலத்தார்க்கு அண்டம் திருமேனி என்பது. (2) அதை உணர்தற்குக் கொள்ளப்

படும் அளவை (ப்ரமாணங்) களுள் உரை (ஆகமப்ரமாணம்) என்னும் ஆப்த வாக்கியத்தைக் கொண்டுணர்தல் குறைபாடே என்பது. (3) அளவைகளுள் (ப்ரத்யட்சம் எனப்படும்) காட்சி ஒன்றே போதுவது என்பது.

வட மொழிகற்போர், அதனைக் கற்கும் முறைமையில், தருக்க சாத்திரவுணர்ச்சியை ஒரளவு அடைகின்றனர். அடைந்த அவ்வுணர்வைக் காப்பாற்றுமல் மறந்து விடுவதுண்டேனும், அடைவது சம்பிரதாயம் ஆகும். தமிழ்கற்போர் நன்னூல் முதலிய சில இலக்கண நூல்களைக் கற்ற அளவில் அமைகின் றனர். அவ்வமைதியால் அவரறிவு வளர் வழியின்றி, நீரின்றி வளராத செடியாய் மடிகின்றது. திருக்குறளைப் பரிமேலழகருரை யொடு பாடங்கேட்போர் தருக்க நூற் கருத்துள்ள குறளுரை களைச் செவ்விதின் உணரமாட்டாமல் ஒதுக்கி விட்ட மாணுக்கர் பலர். வடமொழியிற் சிறிது பயின்ற மாணுக்கர்க்கு அப்பகுதி ஒதுக்கப்படத் தக்கதாவதில்லை. தமிழிலே பழங்காலத்திலே தருக்கம்படித்ததுண்டு. திருக்கோவையை எண்ணர் ஏரணம் என்பர் என்னும் வசநமும், 'எண்ணென்ப ஏனையெழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு' என்னுந் திருக் குறளும், இன்னோரன்னபிறவும் பழந்தமிழ்ப் புலவர்க்குத் தருக்க நூலுணர்ச்சி இருந்த உண்மையைக் குறிக்கும்.

திருக்குறளுரையிற் பரிமேலழகர், சிற்சில இடங்களில் அளவை நூற்கருத்துரைத்தார். அவற்றை உணராதார் அக் குறளுரையை உணராதாரேயாவர்.

“ அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை ” (37)

இதனுரையில், 'அறத்தின் பயன் இதுவென்று யாம் (திரு வள்ளுவர்) ஆகமவளவை யான் உணர்த்தல் வேண்டா சிவிகை யைக் காவுவானோடு செலுத்துவானிடைக் காட்சியளவை தன்னனே உணரப்படும்' என்றும், விசேடவுரையில், “ 'என' என்னும் எச் சத்தால், சொல் ஆகிய ஆகமவளவையும் 'பொறுத்தானோடு ஊர்ந்தா னிடை' என்றதனல் காட்சியளவையும் பெற்றும்,” என்றும் பரி மேலழகர் உரைத்தார். இவ்வுரைப் பெருமை ஏனைய உரைகளிற்

காணப்படாது. 'என' என்றது கொண்டு ஆகமப்ரமாணத்தையும் (உரையளவையையும்) பொறுத்தான் ஊர்ந்தான் எனப்படும் இருவரிடைக்காண்க என்றதால் ப்ரத்யட்ச ப்ரமாணத்தையும் (காட்சியளவையையும்) புலப்படுத்திய பரிமேலழகரது திறம் எதனுல் அமைந்தது! தருக்க நூலுணர்ச்சியால் தானே அமைந்தது ?

'நானேயோ தவஞ்செய்தேன் சிவாய நம எனப்பெற்றேன்' என்னுந் திருவாசகத்தில் 'என' என்றுள்ளதற்குப் பொருள் யாது? என்று சொல்ல என்பதே பொருள். 'என' என்றதில், "சொல்' என்பது அந்தர்க்கதமாயிருக்கிறது.

"வினையே குறிப்பே இசையே பண்பே
எண்ணே பெயரோ டவ்வறு கிளவியும்
கண்ணிய நிலைத்தே 'என'என் கிளவி"

என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தால், 'என' என்றதன் ஆறு பொருளும் கூறுமாறு அறியப்படும்.. படினும், மேல் திருக்குறளிலும் திருவாசகத்திலும் குறித்த பொருள் தொல்காப்பியத்தில் உள்ள ஆறுபொருளுள் எதனுள் அடங்கும்? 'ஊர் எனப்படுவது உறையூர்' என்பதில் உள்ள 'என' என்பதன் பொருள் அவ்வாறனுள் அடங்காது. 'சொல்' என்பது எஞ்சிநிற்கும் என்று இங்குத் தொல்காப்பியர் கொண்டாரல்லர். (சொல் 430, பார்க்க).

"தோற்றம் இசையே நாற்றஞ் சுவையே
உறலோ டாங்கைம் புலனென மொழிப"

என்றதில் 'என மொழிப' என்றுளது. இங்கு என்று சொல்ல எனப் பொருள் உரைத்தல் பொருந்தாது. ஏன் எனின், மொழிப என்று பின் உள்ளதால். திருக்குறளில் 'என வேண்டா' என்றதற்கு 'என்று சொல்ல வேண்டா' எனவும் திருவாசகத்தில் 'எனப் பெற்றேன்' என்றதற்கு என்று சொல்லப் பெற்றேன் எனவும் பொருளுரைத்தல் இன்றியமையாததாகும். ஆகவே என என்னும் அவ்விடத்தில் 'சொல்' என்பது எஞ்சிநிற்கின்றது.

'கடல் ஒல்லென வொலித்தது' முதலிய உதாரணங்களில் எனவெனெச்சம் மிகுதிப் பொருள் தருவதோர் இடைச்சொல்லாம் என்றனர் நன்னூலுரையாசிரியர். சேனுவரையர் இசைப் பொருண்மை குறித்தது என்ருர்.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்பதனுள் என என்பது, பெய்யெனச் சொல்ல என வினைப் பொருள் தருதலின், இடைச் சொல்லடியாகப் பிறந்த செய வெனெச்சமாய் முன்னர்ப் போந்த வினையெச்சத்துள் அடங்கும் என்க." (ஷி)

'மலைவான் கொள்கென வுயர்பலிதூஉய்' என்புழி, 'என' என்பது வினைப் பொருண்மையில் நின்றது' என்ருர்.(தொல். இடை. 10).

'பிரிநிலை வினையே' எனத் தொடங்கும் நூற்பாவில் 'என' என்று வருவித்து 'ஈரைந்து' என்னும் பெயரொடு முடிக்கச் சொல்கின்ருர் கல்லாடர். 'என' என்பது பெயரொடுமுடியுமோ? 'எனத் தோன்றும்' என்றன்ரேமுடியும்? என்னும் என்ரே என்ற என்ரே வருவித்து 'ஆயீரைந்தும்' என்பத ெடு கூட்டி முடிக்க வேண்டுவது அது.

'என' 'என்று' என்னும் இரண்டும் ஒரன்ன என்பதைத் தொல். சொல். 258, 259, 430, உரையிற் காண்க. அவ்வாரு யினும், 'அறத்தாறிது வென வேண்டா' என்னும் இடத்தில் 'என' என்பது நிற்கும். 'என்று' என்பது நிற்பது அத்துணைப் பொருத்தமுடைத்தன்று. பெய்யென்று பெய்யும் மழை என லாமோ? 'மைந்தன் பிறந்தான் எனத் தந்தை உவந்தான்' என்பதில் என்று சொல்ல எனவுரைக்கலாம். மகள் பிறந்தா ளெனத் தாயுவந்தாள் எனின், என்று சொல்ல எனப் பொருள் உரைத்தல் வேண்டாதது; தந்தைக்குக் கேட்டறிதலும் தாய் கண்டறிதலும் உள்ளமையால். 'பெய் என' என்புழி என்று சொல்ல எனல் வேண்டும். வேண்டினும் 'ஆகமப்ரமாணம்' என்ன ஆண்டு இடன் இல்லை. 'அறத்தாறிது என வேண்டா' என்

புழி என்று ஆகமப்ரமாணம் காட்டவேண்டா எனல் வேண்டும். காட்சியளவையே (ப்ரத்யட்சப்ரமாணமே) அமையும் என்றது.

'ஊரெனப் படுவது உறையூர்' 'அழுக்காறென வொருபாவி' என்பவை பெயர்ப் பொருளில் வந்தன என்பர். எம் சிற்றறிவு அவர் கொள்கையளவு எட்டமாட்டாததாயிற்று. ஊர் எனல் படுவது என்பது லகரமெய் முன்றகர மெய்யாகத் திரிந்து பின் பகர மெய்யாயும் மருவிற்று. செயற்படு பொருள் செயப்படு பொருளானது போல்வது அது. அழுக்காறெனல் எனவும் இடம் இல்லை. பரிமேலழகர் தம் திறத்தை ஆண்டுக் காட்டினர். 'என' என்றது எஞ்ஞான்றும் பெயரெச்சமாகாது. ஆகா தேனும் அவர் என்று சொல்லப்பட்ட என்னும் செயற்பாட்டு வினைப்பெயரெச்சப் பொருளுரைத்தார். உரைத்தாலும் அது பெயர்ப் பொருளில் வந்திலது. தொல்காப்பிய வுரையாசிரியர் அவ்வாறு உரைத்தது என்னையோ? பரிமேலழகர்க்கு அது பொருந்திற்றிலது. 'என வேண்டா' (37) 'நாளென வொன்று' (334) என்னும் இடங்களிற் பரிமேலழகர் உரையை நோக்குக. 'என்று ஆகம வளவையான் உணர்த்தல்' என்பதும் 'நாள் என்று அறுக்கப்படுவது ஒரு கால வரையறை' என்பதும் அவருரை. 'தகுதியென வொன்று' (111) 'இன்மையென வொருபாவி'(1042) என்னுமிடங்களையும் நோக்குக. 'அழுக்கா றென வொருபாவி' என்றதற்கும் 'இன்மையென வொருபாவி' என்றதற்கும் உரைத்த பொருள் வேறுபாட்டை ஆய்க. 'நாண் என வொன்றோ' (1257) என்பதற்கு வினையெச்சப் பொருள் உரைத்தார். அங்கனம் உரைத்தவர் 'அறத்தாறிதுவென வேண்டா' என்றதில் அள வையைக் கருதியது அவரது பெரும்புலமையைப் புலப்படுத்து வதேயாகும்.

> 'நல்லாற்றன் நாடி அருளாள்க பல்லாற்றாற்
> றேரினு மஃதே துணை'

என்றதன் உரையில் "அளவைகளானும் பொருந்துமாற்றானும் நன்றான நெறியிலே நின்று நமக்குத் துணையாம் அறம் யாது என்று ஆராய்ந்து அருளுடையராக. ஒன்றையொன்று ஒவ்வாத சமய நெறிகள் எல்லா வற்றானும் ஆராய்ந்தாலும் துணையாவது அவ்வருளே; பிறிதில்லை," என்றெழுதினர்.

மேலும் அவர் ஆங்கு எழுதிய விளக்கம் இது:- `அளவைகளாவன:- பொறிகளாற்காணுங் காட்சியும் குறிகளான் உய்த்துணரும் அநுமானமும், கருத்தா மொழியாகிய ஆகமமும் என மூன்று. ஒப்புப் பற்றியுணரும் உவமையும், இங்கனம் அன்றுயின் இது கூடாது என்று உணரும் அருத்தாபத்தியும், உண்மைக்கு மாருய இன்மையும் என இவற்றைக் கூட்டி ஆறு என்பாருமுளர். இவையும் ஒருவாற்ருன் அவற்றுள்ளே அடங்குதலின் மூன்று என்றலே கருத்து.

(தொடரும்)

திருமந்திரம் TIRUMANTIRAM

ஐந்தாம் தந்திரம் Tantra the Fifth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,
Member, Legislative Assembly,
MADRAS-31.

மலர் 16. இதழ் 3-ன் தொடர்ச்சி

சன்மார்க்கம் துரியம் கடந்த நிலை சேர்க்கின்றது

Sanmarga transcends Turiya State

65. சன்மார்க்க சாதனந் தான்ஞான ஞேயமாம்,
பின்மார்க்க சாதனம் பேதையர்க்காய் நிற்கும்,
துன்மார்க்கம் விட்ட துரியத் துரிசற்றூர்
சன்மார்க்கம் தானவனுகும் சன்மார்க்கமே.

Alone of all paths
Sanmarga granteth the God-head through knowledge;
The rest of paths is for the un-illumined;
Renouncing the ways of impurities
And transcending limits of Turiya
It mergeth the I in Thou;
Verily, Sanmarga is the Path purest.

சன்மார்க்க நெறியே அறிவினுல் இறைவனை அடைவிக்க வல்லது; பிற நெறிகளெல்லாம் அறிவில்லாதார் கையாளும் முறைகளே. ஒவ்வாத நெறிகளை விலக்கி, துரியத்தின் எல்லையையும் கடந்து, மலநீக்கம் அளிக்க வல்ல நன்னெறி அதுவே. தான் அவன் என்ற இரண்டற்ற கலப்பை அளிக்க வல்லதும் அதுவே.

குறிப்பு: வரி 1 ஞேயம்-சிவம். ''பெரும் பெயர்க் கடவுளென ஞேய மொன்றே பெரும் பெயர்க்குப் பொருளாகக் கூறினர்''– சிவஞான போதச் சிறப்புப் பாயிரம்,

வரி: 3 அரி சற்றார்-மலநீக்கம் பெற்றார்.

ஞானி மற்றைய மூன்று பாதங்களுக்கும் உரியவன்

To the Sanmargi the Other three paths open of themselves

66. சன்மார்க்க மெய்த வரும்அருஞ் சீடர்க்குப்
பின்மார்க்க மூன்றும் பெறவியல் பாமென்றால்,
நன்மார்க்கந் தானே சிவனொடு நாடலே
சொன்மார்க்க மென்னச் சுருதிகைக் கொள்ளுமே.

Unto that rare seeker in Sanmarga path
The rest of three paths, of themselves open;
That alone is True Path that union with Siva seeks
Hold thou fast unto it
As the Guiding word that Scriptures proclaim.

ஞான பாதையை எட்டிவிட்ட சாதகனுக்கு, ஏனைய சரியை, கிரியை, யோகம் என்ற நெறிகள் இயல்பிலேயே வந்து விடுகின்றன. சிவனொடு ஒன்றுதலே மெய்ந்நெறியாகும். இதுவே, வேதாகமங்கள் சொன்ன உண்மையாகும் என்று அறிந்து கடைப்பிடியுங்கள்.

குறிப்பு: வரி 1-2

''ஞானயோகக்கிரியா சரியை நான்கு
நாதன்றன்பணி; ஞானி நாலினுக்கு முரியன்''

என்ற அடிகளை ஒப்பு நோக்குக.

– சிவஞான சித்தியார், சுபக்கம்-12-ம் சூத்திரம் 3-ம் அதிகரணம்.

(தொடரும்)

திருச்செந்திலாண்டவன் துணை

திருவாசக அநுபூதி உரை*

(சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

திருச்சதகம் — நான்காம் கொத்து

இனி, நான்காம் கொத்து மறக்கும் மறதியைத் தரிசிப்பிக்கும் சிவசத்தியின் அநுபூதி. தினைப்போது அளவேனும் திருவடியை அகன்று நில்லாத ஆன்ம இன்பப் பெருமையைக் கூறிய திருவருள் விநியோக மாவன:

வினையென் போலுடை யார்பிற ராருடை யானடி நாயேனைத்
தினையின் பாகமும் பிரிவது திருக்குறிப் பன்றுமற் றதனாலே
முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்துநான் முட்டிலேன் றலைகீறேன்
இனையன் பாவனை யிரும்புகல் மனஞ்செவி யின்னதென் றறியேனே.

(இ – ள்). உலகத்தில் என்னைப்போல் கொடிய வினைசெய்த உயிரைக் கண்டதில்லை. எதனாலென்னில், தினைப்போதென்றது கால ஏகதேச வுருவக மாதலால், அநாதியே என்னை விட்டுப் பிரிந்திருப்பதோர் காலமும் திருவுளச் சம்மதமுமில்லை. அவை வினவில், கடையான நாய்போன்ற எளிமை பற்றும் அடிமையாதலால், நாதன் திருவடி ஒப்பற்ற ஞானமலர்; அடி யேனோ வாசனை. ஆனதால், அடிமை அகன்று நிற்பதெங்கே? அவ்வுயிர் போல நின்ற திருவடியைக் கண்டும் பிரிந்த பாவியான நான் உடனே தலையைப் பாறையில் முட்டவில்லை; வாளால் தேகத்தைச் செகுக்கவில்லை. அன்புள வடியார் செய்தபடி செய்யாவிடினும் கிரியா யோக பாவனையாகினும் திருவடிப்பணி செய்ய நினையாத மனம் கல்லே. இவ்வுபதேசங் கேளாத செவி இரும்பே. இவையோ, இவைக்கு மேலோ? அடியேன் அறிவது யாது? – என அருளியதைக் காண்க.

---

* இவ்வரிய நூலைப் பதிப்பித்த சென்னை–திருவான்மியூர், மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூல் நிலையத்தாரின் அனுமதி பெற்று இது வெளியிடப் பெறுகின்றது. இதன் விலை ரூ. 13/- ஷெ நூல் நிலையத்தில் கிடைக்கும், 20% கழிவு உண்டு.

சிறப்புக் கட்டுரை

தென்னகக் கோயில்கள்

திரு. கே. ஆர். ஸ்ரீனிவாசன் அவர்கள்

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்காதே" என்பது அடிக்கடி கூறப்படுகிற ஒரு பழைய தமிழ்ப் பழமொழியாகும். தென்னிந்தியாவானது கோயில்களுக்குப் பெயர் போனதாகும். பெரியவையும் சிறியவையுமாய் ஏராளமாகக் காணப்படுகிற இக்கோயில்கள் பல்வேறு காலங்களின் கட்டடக் கலை நுட்பங்களுக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகத் திகழ்கின்றன. கட்டடக் கலைப் பாணிகளும் சிற்பக் கலையும் ஓவியக் கலையும் பல்வேறு சமய வழிபாடுகள், மரபுகள் ஆகியவற்றின் வளர்ச்சியையும் மாறுபாடுகளையும் ஒட்டி எவ்வாறு அபிவிருத்தியடைந்து வந்திருக்கின்றன என்பதை இவை மூலம் நன்கு தெரிந்து கொள்ளலாம்.

சங்க இலக்கியங்களில் கோயில்கள் பற்றிய பல குறிப்புகள் அடங்கியுள்ளன; கோட்டம், நகரம், கோயில், பள்ளி எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டு வந்துள்ள அக்காலக் கோயில்கள் செங்கற்களாலும் மரத்தாலும் கட்டப்பட்டவையாகும். காலத்தாலும் பருவக் கோளாறுகளினாலும் தாக்குப் பிடிக்க முடியாமல் அக்கோயில்கள் காலப் போக்கில் சிதிலமடைந்து அழிந்துவிட்டன. ஆயினும், நாகார்ஜுனக்கொண்டா, தனவலப்பாடு, காவேரிப்பட்டினம் ஆகியவிடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் போது, கிறிஸ்துவ சகாப்தத்தின் முதல் அறுநூறு ஆண்டுகளைச் சேர்ந்த இத்தகைய கோயில்களின் சிதிலங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இந்திய அரசினரின் செய்தித்துறை அலுவலக அனுமதி பெற்று இது பிரசுரிக்கப்பெறுகிறது.

செஜாலா (குண்டூர்), டொ (உஸ்மானுபாத ஜில்லா) ஆகிய விடங்களில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் மூலம் இரண்டு விமானக் கோயில்கள் பூரணமாகத் தோண்டி எடுக்கப்பட்டுள் ளன. பொதுவான எல்லா வடிவமைப்புகளும் அவற்றில் இடம் பெற்றுள்ளன. அதாவது, பௌத்த, இந்து, ஜைன கோயில் களின் கட்டடக்கலைப் பாணிகளில் பொதுவாகக் காணப்படுகிற சதுரம், நீள் சதுரம், வட்டவடிவம், விமான வடிவம் ஆகியவை அனைத்தும் அவ்விரு கோயில்களிலும் அடங்கியுள்ளன.

தென்னிந்தியாவில் வெகுகாலமாகவே சமயச் சார்பான கட்டட வேலைகளுக்கு பெரிய பாருங்கற்கள் ஒரு கட்டட வேலைப் பொருளாகப் பயன் படுத்தப்படவில்லை; ஏனென்றால், சமாதி, கல்லறை, ஞாபகச் சின்னம் ஆகியவற்றுடன் அவை பாரம்பரிய மாகத் தொடர்பு கொண்டிருந்ததாலேயே சமயச் சார்பான புனித காரியங்களுக்கு அவை ஒதுக்கப்பட்டு வந்தன. தற்காலத் தமிழ் இலக்கியங்களில் இதற்கான சான்றுகளை ஏராளமாகக் காணலாம். தென்னிந்தியாவெங்கிலும் ஆயிரக்கணக்காகக் காணப்படுகிற பெரிய பாறைக் கட்டட நினைவுச் சின்னங்கள் முக்கியமாய் கல்லறைகளாகவோ நினைவுச் சின்னங்களாகவோ அமைந்திருப்பது இதைப்பின்னும் தெளிவாக எடுத்துக் காட்டு கிறது. இத்தகைய கட்டடக்கலைப் பாணியை பௌத்தர்கள் அதிகமாக விரும்பிப் பின்பற்றினர்கள். மதகுரு, அவருடைய மாபெரும் சீடர்கள் ஆகியோரின் புனித சடலங்களை பௌத் தர்கள் வழிபாடு செய்துவந்தனர். அவர்களுடன் தொடர்பு கொண்டிருந்த பொருள்களையும் அவர்கள் அடக்கம் செய்யப் பட்ட ஞாபகச் சின்னத்தையும் அதாவது ஸ்தூபியையும் பௌத் தர்கள் வணங்கி வந்தனர். முக்கியமாய் செங்கற்களால் கட்டப் பட்டு, மர அளிகள் போடப்பட்டிருந்த அந்த ஸ்தூபிகள் மீது கல் வேலைப்பாடுகள் செய்யப்பட்டு, அசல்மர வேலைப்பாடுகளைப் போலவே கல் கம்பங்களைக்கொண்டு அளிகளும் குருக்குச் சட்டங்களும் அடைக்கப்பட்டன. அதே சமயத்தில், அதாவது கி. மு. மூன்றுவது நூற்றுண்டிலிருந்து சுமார் 900 வருட காலத்தில் அசோகராலும் அவருடைய பேரன் தசைதாவினுலும் பாறைகளைக் குடைந்து கோயில்கள் அமைக்கும் வேலை ஆரம்

பிக்கப்பட்டது; அதையடுத்து, பம்பாய், புனு, நாஸிக் ஆகிய விடங்களிலும் ஆந்திராவில் குண்டபப்பள்ளியிலும் கற் கோயில்கள் அமைக்கப்பட்டன.

கி. பி. ஆருவது நூற்ருண்டின் பிற்பகுதியில், சாளுக்கி யர்கள், பல்லவர்கள், பாண்டியர்கள் ஆகிய மூன்று அரச பரம் பரையினர் காலத்தில் விந்திய மலைக்குத் தெற்கே தென் னிந்தியா முழுவதிலும் கலை, கட்டட நுட்பத் துறைகளில் புரட்சி கரமான மாறுதல்கள் ஏற்பட்டன. அரசியலில் மட்டுமின்றி இத்துறைகளிலும் அவர்களிடையே மிகுந்த போட்டி இருந்து வந்தது. பௌத்த மதத்தின் செல்வாக்குக் குறைய ஆரம்பித்தது; தமிழ் நாட்டில் நாயன்மார்கள், ஆழ்வார்கள், ஆகியோரின் தலைமையில் சைவ, வைணவ மறுமலர்ச்சி இயக்கங்கள் ஆரம்ப மாயின. தீவிர சைவ சம்யம் செழித்தோங்கி வளர்ந்தது. கன்ன டப் பிரதேசங்களிலும் தெலுங்குப் பிரதேசங்களிலும் ஜைன சமயம் புதியதொரு வேகத்துடன் பரவியது.

ஆருவது நூற்ருண்டின் கடைசிக்கால் பகுதியில்தான், சாளுக்கிய மன்னர் மங்களேசனும் முதலாவது மகேந்திரப் பல்லவ மன்னனும் பழைய பாரம்பரியத்திலிருந்து விலகி கற் பாறைகளைக் குடைந்தும் செதுக்கியும் இந்துக் கோயில்களை அமைக்க ஆரம்பித்தனர். அதையடுத்து ஜைனர்களும் அதைப் பின்பற்றினர். மங்களேசர்தான் முதல் முதலாக தக்கணத்தில் பரதாமி என்ற இடத்தில் செம்பாறையைக்குடைந்து விஷ்ணுவுக் காகக் குகைக் கோயில் எழுப்பினுர். அதையடுத்து அங்கே சிவா, விஷ்ணு, சைரு ஆகியோருக்காக மூன்று குகைக் கோயில்கள் அமைக்கப்பட்டன. பின்னர் மகேந்திரவர்மன் மண்டகப்பட்டு என்ற இடத்தில் மிகக்கெட்டியான கருங்கல் பாறைகளைக் குடைந்து பிரம்மா, சிவா, விஷ்ணு ஆகிய மும் மூர்த்திகளுக்காக முதல் குகைக் கோயிலை எழுப்பினுர். அதன் பின்னர் சுமார் ஆயிரம் வருடங்கட்குப் பிறகு, அசோகச் சக்கர வர்த்தியும் அவருடைய பேரனுன தசரதாவும் கயாவுக்கு அருகில் அதேபோன்ற கெட்டிப் பாறையைக் குடைந்து அஜீவிகா குகைக் கோயில்களை அமைத்தார்கள்.

மகேந்திரவர்மனை அடுத்துப் பட்டத்துக்கு வந்த நரசிம்ம வர்மன் மாமல்லன் பாறைகளைக் குடைந்து குகைக்கோயில்கள் அமைப்பதில் புதிய உத்திகளைக் கையாண்டு சிற்பக்கலைக்குப் புதுமெருகு கொடுத்தான்.

மாமல்லனின் சாதனைகள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை யாகும். அக்காலத்தில் செங்கற்களாலும் மரத்தாலும் அமைக் கப்பட்ட கோயில்களின் சகல அம்சங்களையும் கொண்ட கற் கோயில்களை மாமல்லன் ஒரே கல்லிலேயே உருவாக்கினான். இவை மகாபலிபுரம் ரதங்கள் என அழைக்கப்படுகின்றன. மாமல்லனாலும் அவருடைய வழித் தோன்றல்களாலும் அமைக் கப்பட்ட இந்த ஒற்றைக் கல் கோபுரங்களின் அமைப்புகளே தென்னிந்தியக் கோயில்களுக்கு ஒரு முன்மாதிரியாக அமைந் திருந்தன. பின்னர் பாண்டியர்கள் கழுகுமலையில் (திருநெல்வேலி ஜில்லா) வேட்டுவன் கோயில் என்ற இடத்தில் இன்னும் பெரிய வையும் அதிகச் சிற்ப வேலைப்பாடுகள் அமைந்தவையுமான ஒற்றைக் கல்கோயில் ஒன்றை எழுப்பினார்கள்.

பல்லவ மன்னர்கள் பல்வேறு வகையான கற்களைக் கொண்டு கோயில்களை எழுப்பினர். மகாபலிபுரத்திலுள்ள கடற் கரைக் கோயில், ஒலக்கன்னேஸ்வரர் கோயில், தென் ஆற்காடு ஜில்லாவில் காஞ்சியினுள்ள கைலாசநாதர் கோயில் அங்குள்ள இதர கோயில்கள் ஆகியவை ராஜசிம்மப் பல்லவர் காலத்தில் (கி. பி. 700–728) கட்டப்பட்டவை. அவரை யடுத்து ஆட்சிக்கு வந்த இரண்டாவது நந்திவர்மன் பல்லவ மல்லன் காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோவிலைக் கட்டினார். தங்களுடைய மன்னர்களாகிய சாளுக்கியர்களுக்குப் போட்டியாக இவர்களும் இந்தக் கோயில்கள் பலவற்றில் செம்பாறுங் கற்களை பெருமள வில் உபயோகித்தனர். பிற்பட்ட காலத்தில் தென்னகத்தில் ஆட்சிக்கு வந்த சோழர்கள், பிற்காலப் பாண்டியர்கள், விஜய நகர மன்னர்கள், நாயக்க மன்னர்கள் ஆகியோர் நிர்மாணித்த கோயில்கள் இன்னும் சிறப்புற்று விளங்குகின்றன.

தமிழர் கட்டடக்கலைச் சிறப்பு

முதலாவது ராஜராஜ சோழரால் (கி. பி. 1000) தஞ்சாவூரில் பிரகதீசுவரர் ஆலயமும், அவருடைய புதல்வர் முதலாவது

ராஜேந்திர சோழரால் கங்கைகொண்ட சோழபுரம் கோயிலும் கட்டப்பட்டபோதுதான் தமிழர் கட்டடக்கலை உச்சக் கட்டத்தை எட்டியது. இவ்விரு கோயில்களும் வடிவமைப்புக்கும் தோற்றத் துக்கும் கட்டடக்கலை நுட்பத்துக்கும் சிறபச் சிறப்புக்கும் பெயர் போனவை ஆகும்

மத்திய சோழர் காலத்தில் அதாவது சுமர் 12-வது நூற் ருண்டில், விமானங்களும் கோபுரங்களும் செங்கற்களாலும் காறையாலும் கட்டப்பட்டன. இத்தகைய உயரிய வேலைப்பாடு களை தாராசுரத்தில் ஆயிரவடிவிசுவரர் கோயிலிலும், திருப் புவனத்தில் கம்பகரேசுவரர் கோயிலிலும் காணலாம்.

பிற்காலச் சோழர்களும் பாண்டியர்களும் ஏற்கெனவே கட்டப்பட்ட கோயில்களில் மேற்கொண்டு மண்டபங்கள் துணை விமானங்கள், மதில்கள் அதிகப்படிக் கோபுரங்கள் முதலிய வற்றை விரிவான முறையில் அமைத்தனர்.

இத்தகைய விஸ்தரிப்பு அம்சங்களை ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயில் சிதம்பரம் நடராசர் கோயில், திருவண்ணுமலை அருணுச் சலேசுவரர் கோயில் ஆகியவற்றில் காணலாம்

ஆயிரக்கணக்கான வருடங்கட்கு முன்பே தென்னகத்தில் கட்டடக்கலை நுட்பம் எவ்வளவு முன்றேற்றம் அடைந்து வந் திருக்கிறது என்பதற்கு பல்வேறு வகையான இந்தத் திருக் கோயில்கள் சிறந்ததொரு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பர இராமலிங்க சற்குரு புலம்பற்கண்ணி*

தொகுத்தவர், திரு. P. P. துரைசாமி அவர்கள்,
கோயமுத்தூர்.

[மலர் 16, இதழ் 1-ன் தொடர்ச்சி]

தோன்ருத் துணையாயித் — தொல்லுலகிலேயிருத்தற்
சான்ருமோ நின்கருணை — சாற்றியருள் சற்குருவே 211

என்னு தரவெனக்கிங் — கில்லையென நன்கறிந்திங்
குன்னுதரவு கொண்டே — வுய்கின்றேன் சற்குருவே 212

எள்ளளவு நின்மகிமை — யெண்ணுதே னுயிடினும்
வள்ளனின் பேர்வழுத்தி — வாழ்கின்றேன் சற்குருவே 213

எத்தனை நாணின்வரவை — யெண்ணியெதிர்பார்ப்பேனின்
சித்தமதை நாயேற்குச் — செப்பியருள் சற்குருவே 214

முப்பாலே துன்பத்தின் — முழ்கியிருக் கின்றவெனைக்
காப்பா ரில்லாதே — கலங்குகின்றேன் சற்குருவே 215

நீங்காத நோயா — னிலைகுலைந்து நிற்குமெனைத்
தாங்கா திருந்திடலுந் — தக்கதோ சற்குருவே 216

என்மேற் பார்முகமா — யின்னுமிவணியிருந்தா
னின்மேற் பழிசுமத்த — நேருமென்றன் சற்குருவே 217

வன்னிதியோர் பாற்சென்று — மாழாந்து துன்படைய
வுன்னிதய மென்பாலி — லொவ்வியதோ சற்குருவே 218

உன்னை மறந்தாலென் — னுயிர்வாழா தென்றுணர்ந்தும்
பின்னையென் பாழ்நெஞ்சாற் — பேதுற்றேன் சற்குருவே 219

எத்தனையோ குற்ற — மிழைத்திட்ட நாயேனை
அத்தனையு நோக்கா — தருள்பவரார் சற்குருவே. 220

(தொடரும்)

---

*திரு. ச. மு. கந்தசாமி பிள்ளையவர்கள் இயற்றியது.

தாயுமானவரின் - பராபரக்கண்ணிகள்

Couplets in venerable adoration of the Omnipotent and Omnipresent

sung by

St. THAYUMANAVAR

20

Grace is the very form of God, the Supreme Lord. He is more merciful towards us and expects nothing like the raining clouds in the sky. Revealing this unique aspect in the part of God, St. Ramalingar describes Him as the one great umparalleled and compassionate Being. The Supreme God offers Himself to the true and matured Souls in the form of Guru and initiates them to tread the path towards salvation at His Feet. But we ourselves are in no way helpful to the Supreme Self.

தன்னைத்தந்து என்னைத் தடுத்தாண்ட நின்கருணைக்கு
என்னைக்கொண்டு என்னபலன் எந்தாய் பராபரமே.

(பொ-ரை):- தேவரீரை அடியேனுக்குக் குருவாகத் தந்து அடியேனைத் தடுத்தாட் கொண்ட தேவரீரின் திருவருளுக்கு என்னாலாய பயன் ஒன்றும் இல்லை தந்தையே!

Oh....my Lord Supreme! Oh...my Father! You offered Yourself to me in the form of my spritual preceptor and initiated me towards salvation; but of what avail am I to You Who has showered on me such Supreme Grace?

(தொடரும்)

Translated by Sri. K. PALANISAMY, M.A., Lecturer in Tamil, Sri. K. G. S. Arts College, Arulnandi Nagar.

சேக்கிழார்*

திரு. K. M. வேங்கடராமையா அவர்கள், M.A., B.O.L.,
திருப்பனந்தாள்.

தொண்டை நன்னாடு

'உயிர்களுக்கு எல்லையில் கருணைத் தாயனாள் அரும் தவம் புரியத் தூயமாதவம் செய்தது' தொண்டை நன்னாடு; 'நடுநிலை ஒழுக்கத்துத் தலைமைசால் பெருங்குடி தழைத்தது' தொண்டை நன்னாடு; பழையனூர் சிறுத்தொண்டர் தம்சொல்லையே காக்க வணிகன் பொருட்டு உயிர் நீத்த பெருஞ்சிறப்புடையது பெருந் தொண்டை நாடு; 'சேரனார் திருமலை நாட்டு வயவர்கள் மைத் துனக்கேண்மை பூண்டது' பெருஞ்தொண்டை நாடு; செங்கண் மால் விடையார் திருக்காளத்தியும், ஆறுசூழ் அண்ணலார் திரு விடைச்சுரமும், நீள்வரைப்பின் உம்பர்நாயகர் திருக்கழுக்குன்றமும், செங்கண்மால் தொழும் திருமுல்லை வாயிலும் மறையவர் பூதி சாதனம் போற்றிய வல்லமும், மருவு கங்கை வாழ் சடையவர் மகிழ்ந்த மாற்பேறும். பருங்கை யானையை உரித்தவர் திருப்பாசூரும், மன்னவன் இறக்கிய வரியை 'ஒற்றியூர்நீங்க' என்று எழுதும் திருவொற்றியூரும், மட்டிட்ட புன்னையங்கானல் மடமயிலைக் கட்டு இட்டங்கொண்ட காபாலீச் சரத்தான் மகிழும் திருமயிலாபுரியும், தண்பொழில் சூழ் திருவான்மியூரும், எவ்வுகங்களுள்ளும் உள்ளது என்று யாவரும் ஏத்தும் காஞ்சிமா நகரமும், முதலாய தெய்வ

---

* திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்து அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சேக்கிழார் நினைவில், குன்றத்தூரில் சேக்கிழார் சுவாமிகளின் நினைவு நாள் ஆகிய வைகாசிப் பூசநாளில் குன்றத்தூரில் அன்னம்பாலிப்பு ஆண்டுதோறும் நிகழ்த்துகிறார்கள். பெரிய புராணத்தைத் தாம் நிறுவிய பன்னிருதிருமுறைப்பதிப்பு நிதியின் கீழ் அடக்க விலையில் பெற அச்சிடச் செய்தருளியதோடு, பெரிய புராண வசனத்தையும் எழுதச்செய்து வெளியிட்டுள்ளார்கள்.

நெறிச் சிவம் பெருக்கும் திருத்தலங்கள் எண்ணுன்கு கொண்டது தொண்டை நன்னுடு; தூக்குசீர்த் திருத்தொண்டத்தொகை விரி வாக்கினுல் சொல்ல வல்லபிரான் எங்கள் பாக்கியப் பயன் வாழ் பதி குன்றத்தூர் இருப்பதும் இத்தொண்டை நன்னுடே.

வேளாளர் சிறப்பு

"வேளாளர் என்பவர்கள் வள்ளன்மையால் மிக்கிருக்கும் தாளாளர்" என்று ஞானசம்பந்தரால் புகழப் பெற்றவர்கள் வேளாளர்கள். 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்று சிறப்பிக்கப் பெற்றவர்கள் இவர்கள். "வெண்ணெயூர்ச் சடையன் தங்கள் மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி" என்ற கம்பர் சொல்லுக்கு ஏற்ப அரசனுக்கு முடி கொடுக்கும் உரிமை உடையவர்கள் இவ்வேளாளர்கள். இவர்கள்

"மேழி பிடிக்கும்கை; வேல்வேந்தர் நோக்கும்கை;
ஆழி தரித்தே அருளும்கை;- சூழ்வினையை
நீக்கும்கை; என்றும் நிலைக்கும்கை; நீடுழிக்
காக்கும்கை; காராளர் கை"

எனப் புலவர்களால் பாராட்டப்பெற்றுள்ளார்கள். மேலும் வேளாளர்கள் பாராளும் திறலரசருக்கு வெற்றி விளைவிக்கும் தானைத் தலைவர்களாகவும் விளங்கினர்.

'வாயிலார் சத்தியார் விறல்சேர் மிண்டர்
வாக்கரையர் சாக்கியர்கோட் புலிகஞ் சாறர்
ஏயர்கோன் கலிக்காமர் முனைவித் தாக்கும்
இளையான்றன் குடிமாறர் மூர்க்கர் செங்கைத்
தாயனுர் செருத்துணையார் செருவில் வெம்போர்
சாதித்த முனையடுவார் ஆக நம்பி
பாயிரஞ்சேர் அறுபதுபேர் தனிப்பேர் தம்மில்
பதின்மூவர் வேளாளர் பகருங் காலே' (செ. 17)

என்ற திருத்தொண்டர் புராண வரலாற்றில் கண்ட வண்ணம் அறுபான் மும்மை நாயன்மார்களுள் பதின்மூவர் வேளாண்குலச் செம்மல்கள் ஆவர்.

சேக்கிழார் குடி

தொண்டைநாட்டு இருபத்துநான்கு கோட்டங்களுள் புலியூர்க் கோட்டத்தைச் சேர்ந்த திரு ஆம்ஊர் குன்றத்தூர். இக் குன்றத்தூரில் குடியேறிய வேளார்களில் கூடல்கிழான், புரிசைகிழான், வெண்குளப்பாக்கிழான், குளத்துழான், சேக்கிழான் என்ற பல முதன்மைக் குடிமக்கள் வாழ்ந்துவந்தனர். இவர்கள் அறிவு, ஒழுக்கம், சீலம், வாய்மை முதலிய நற்பண்புகள் உடையராய்ச் சிவபக்தியில் சிறந்தனர்.

அருண் மொழித் தேவர்

அன்னோருள் சேக்கிழார் குடியில் வெள்ளியங்கிரியார் என்ற ஒருவர் வாழ்ந்துவந்தார். அவருடைய மனைவியார் அழகாம்பிகை எனப்பெற்றார். "எங்கள் பாக்கியப் பயனால்" இவர்களுக்கு ஒரு ஆண் மகவு பிறந்தது. அக்குழந்தைக்கு அருண்மொழித்தேவர் எனப்பெயர் சூட்டப்பட்டது. அருண்மொழித்தேவன் என்பது சோழ அரசர்களுள் முதலாம் இராச ராச சோழனுடைய பெயர். இராசராசனும் சிவபக்தியில் சிறந்தவன். சிறந்த சிவபக்தியுடைய வெள்ளியங் கிரியாரும் தம் அருமை மைந்தருக்குப் பண்டு வாழ்ந்த சோழ அரசனது பெயரையே இட்டார். அந் நாளில் அருண்மொழித் தேவர் என்ற பெயர் பலரும் பூண்டிருந்ததாகவும் தெரிய வருகிறது. எனவே இப்பெயர் சேக்கிழாருக்கும் பெற்றோரிட்ட பெயராகக் கொள்ளலாம். இனி இப் பெயரைக் காரணப் பெயராகக் கொள்ளினும் அமையும் சேக்கிழார் பாடிய நூலாகிய பெரியபுராணம் திரு அருள் வாய் மொழி ஆகும். ஆகவே இவருக்கு அருள்மொழித் தேவரென்ற பெயர் வந்ததெனவும் கொள்ளலாம்.

சேக்கிழார்

இனி இவருக்குச் சேக்கிழார் என்ற பெயரே எல்லோராலும் அறியப் பெற்றதொன்று. சேக்கிழார் என்பது இவர்பிறந்த குடிப் பெயர். அக்குடிப் பெயராலேயே இவருக்குப் பெயரமைந்தது.

அமைச்சரானமை

கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் சிறந்தவராகச் சேக்கிழார் வாழ்ந்து வருங்கால் சோழவரசனாகிய அநபாய சோழன் "ஞாலம்

மலை கடல் இவற்றினும் பெரியன யாவை?" என்று ஒரு வினா விடுத்தனன். புலமைசான்றபலரும் விடை பகரகிற்றிலர். இதனை அருண்மொழித் தேவர் அறிந்து சோழனது வினாவுக்கு விடையாகக்,

"காலத்தி னுற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

"நிலையில் திரியா(து) அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது"

"பயன்றூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது"

என்னும் மூன்று குறட்பாக்களை எழுதி அரசனுக்கு ஓலை விடுத்தார். அரசன் மனமகிழ்ந்து சேக்கிழாரைத் தனதுஅவைக்கு வரச்செய்து, அவரை அமைச்சராக ஆக்கி உத்தம சோழப் பல்லவன் என்னும் பட்டமும் அளித்தனன். இச்செய்தியைச் சபாபதி நாவலர் அவர்கள் இயற்றிய சிதம்பர சபாநாத புராணத்திலே அமைத்துள்ள சேக்கிழார் தோத்திரப் பாடலினின்றறியலாம்.

"ஞாலமலை கடல்தன்னில் பெரியதெ(து)
எனஎடுத்து ஞால மாள்செங்
கோலன்அந யாயன் முத்திறக்
குறிப்பைக் குறிப்பி னேர்ந்து
சாலவுயர் திருக்குறளில் மூன்றுஇறையாக
எழுதியவன் அரசு தாங்கி
வாலறிவால் திருத்தொண்டின் புகழ்விரித்த
சேக்கிழார் மலர்த்தாள் போற்றி!"

என்பது அப்பாடல். கம்பர் பாடியதாகக் கருதப்படும் திருக்கை வழக்கம் என்றும் நூலிலும்,

'— காவலவன்
மண்ணில் கடலில் மலையில் பெரியதென
எண்ணி எழுதிக் கொடுத்த ஏற்றக்கை'

என்ற வரிகளில் இச்செய்தி குறிக்கப்பட்டுள்ளது.

இவர் அமைச்சர் தலைவராக வீற்றிருக்குங்கால்,

"எண்ணி இதுசெய் திடின்இதனால்
எய்தப் படுவ(து) இஃ(து) எய்தா(து)
இரியப் படுவ(து) இஃ(து) உண்மை
எய்தப் படலாற் பயனின்றே
கண்ணிய அதை மறந் தொழிக;
நள்ளார் முனைமேல் இப்பொழுது
நயந்து படர்ந்து பொருதுவமேல்
நமதே யாகும் நடுவாகை
தண்ணி மயம்போல் புகழ்ப்போர்வை
தாங்கற் காய கருமமிது
தப்பாது ஆற்றப் பொருள்வருவாய்
தவாதுண் டாம்என்(று) இவைமுதலாங்
கண்ணி வளவற்(கு) உரைத்தருள்செய்
கனிவாய் முத்தம் தருகவே
கனகக் குன்றை அனகசெழுங்
கனிவாய் முத்தம் தருகவே"

என்று சேக்கிழார் பிள்ளைத் தமிழாசிரியர் கூறியவண்ணம், 'நன்கு ஆராய்ந்து இச்செயல் செய்தால் இச்செயல் நிறைவேறும்; இச்செயல் நிறைவேறாது எனஎண்ணிக் காரியங்களைச் செய்ய வேண்டும்' என்றும் 'ஒருபொருளைப் பெற்றால் அதனால் பயனில்லையென்றால் மறந்தொழிதல் வேண்டும்' என்றும், 'பகைவரை இன்னசமயத்தில் சென்று பொருதால் வெற்றி எய்தலாம்' என்றும், புகழெய்தற்குரிய காரியங்கள் இன்னவை' என்றும், 'இன்ன காரியங்களைச் செய்யின் உறுதியாகப் பொருள் வரும்' என்றும் இன்னோரன்னவற்றைத் தம் அரசனாகிய அநபாய சோழனுக்கு அறிவுறுத்தி வந்தார்.

பெரிய புராணம் பாடியமை

அந்நாளில் பலரும் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய சீவக சிந்தாமணியைக் கற்று அதன் சுவைகளை நுகர்வாராயினர். அங்ஙனமே அரசனாகிய அநபாயனும் அந்நூலையே பெரிதும் பாராட்டிக் கேட்பானாயினன். சேக்கிழார் அரசனை நோக்கிச்

"சமணர் பொய்ந் நூலிது; மறுமைக்கு ஆகாது; இம்மைக்கும் அற்றே, வளம் மருவு சிவகதை இம்மைக்கும் மறுமைக்கும் உறுதி" என்று புகன்றார். சேக்கிழார் பிள்ளைத் தமிழாசிரியரும் இச்செய்தியைப் பின்வருமாறு கூறியுள்ளார் :

"கார்கொண்ட அமணசிந் தாமணியை வளவர்கோன்
கங்குல்பகல் ஆராய்தரக்
கண்டொழிந் தாவதிது வேயென்று தொண்டர்தம்
மகத்துவங் கருதவுய்த்துப்
பார்கொண்ட மன்னரல் லவைநீக்கி நல்லவை
பரிந்திடச் செயலமைச்சர்
பண்பெனத் தெரிந்தகுன் றத்தூ ருதித்தவெம்
பரமனைக் காக்கவென்றே. (காப்புப்பருவம்–6)

அரசனும், "இது பயனற்ற கதையானால் அம்மையும் இம்மையும் உறுதி பயக்கத் தக்க சிவகதை யாது? அதனை அடைவுபடக் கூறுக" என்று கேட்டுக் கொண்டான். சேக்கிழாரும், 'திருவாரூரில் இறைவன் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் தில்லைவாழ் அந்தணர் என்று அடியெடுத்துக் கொடுக்க அந்நம்பியாரூரர் திருத்தொண்டத் தொகையைப் பாடி அடியார்களைத் துதித்தார்; பின்னர்த் திருநாரையூரில் பொல்லாப் பிள்ளையார் திருவருள் பாலிக்க நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதியைப் பாடி அடியார்களைத் துதித்தார்; அத்திருவந்தாதியை இராச ராசசோழன் (I) சிவாலயமுனிவர் முதலியோர் கேட்டுப் பாராட்டினர்" என்று கூறினர். அரசன், "அத்தூயகதையை அடைவு படச் சொல்வீர்" எனக் கேட்கச் சேக்கிழாரும் தில்லை நகரை அடைந்து கூத்தப் பெருமானை வணங்கி, "உனது அடியர்சீர் அடியேன் உரைத்திட அடி எடுத்து இடர்கெடத்தருவாய்" என வழுத்தினர். இறைவனும், "தொண்டர் சரித்திரமனைத்தையும் அவரது மன அறையில் குவித்த"*தோடு "உலகெலாம்" என்று அடியெடுத்துக் கொடுத்தார். அதனையே முதலாகக் கொண்டு அச்சொற்றொடரையே தமது புராணத்தின் நடுவிலும் ஈற்றிலும் பொருத்திச் சைவ பரிபாஷைகளையும் சம்பிரதாயங்களையும், தெரித்து நாயன்மார்கள் வரலாறுகளைப் பாடி முடித்தார்.

* சேக்கிழார் பிள்ளைத்தமிழ். காப்புப் பருவம் செய்யுள் 4.

நூல் அரங்கேற்றம்

இச்செய்தியை அரசன்கேட்டு மகிழ்ந்து தில்லைக்கு வந்து சேர்ந்தான். வளவர்கோன் வரவறிந்து, தில்லை மறையோரும் வண்மை மடபதிகளும், மற்றுமுள்ள பெரியோர்களும், சேக்கிழார் பெருமானும் வரவேற்றனர். யாவரும் ஒருங்கு சென்று நடராசப் பெருமானை வணங்கினர். நடராசப் பெருமானும், இந்நூலை 'அரங்கேற்றுக' என அருள் செய்தார்: திருச்சிலம் பொலியும் உடன்கேட்டது. அரங்கேற்றத்துக்குத்

> "திருநெறித் தமிழ் வல்லபேர்கள் சிவாகமங்கள் படித்தபேர்
> கருநெறிப் பகை ஞானநூல்பல கற்றபேர் மறைகற்றபேர்
> குருநெறிக்(கு)உரி யோர்இலக்கண லக்கியங்கள் குறித்தபேர்
> பெருநெறிப்பல காவியங்கதை பேசவல்லவ ரனைவரும்"*

வந்திருந்தனர். சேக்கிழார் பெருமான் சித்திரைத் திங்கள் ஆதிரை நாள் தொடங்கி எதிராமாண்டு சித்திரைத் திங்கள் ஆதிரை வரையிலும் தாம்செய்த சிவகதையினை விளங்க விரித்துச் சொல்ல அடியாரெல்லாம் 'சுருதிமொழி இதுவெனக் கைதொழுது நெஞ்சம் கனியக் கனியக் கண்ணீர் வாரக்' கேட்டனர்.

அங்ஙனம் கேட்டவர்கள் சேக்கிழாரை '‡நாடிய விரிநூல் சொற்றிடு திறனால் நன்னூலாசிரியன்' என்று புகழ்ந்தார். 'நகுபாசுர முதல் உரைசெய் தலினால் நவில் உரையாசிரியன்' என்று சிலரியம்பினர்; பரசமயக் குழி வீழ்ந்தவர் நீப்பப் போதனை செய்நிலையால் போதகாசிரியன்' என்று சிலர் புகழ்ந்தனர்; சிலர் இவர் பாடல்களை, 'அத்திதருங்கவி†' என்றனர்; வேறு சிலர் 'புத்திதருங்கவி' எனப் புகன்றனர்; மற்றுஞ்சிலர் 'சித்திதருங் கவி' எனச் செப்பினர். மேலுஞ் சிலர், 'எல்லாத் தீர்த்தங்களும் விளைவியாத சுத்திதருங் கவி' என்றனர்; பின்னும் "பத்திதருங் கவி" என்றும், "பல்லோர்க்கும் முத்திதருங் கவி" என்றும் பலரும் புகன்றனர்; இம்மட்டோ?

---

* திருத்தொண்டர் புராண வரலாறு செய்யுள் 77.

‡ சேக்கிழார் பிள்ளைத்தமிழ் சப்பாணிப் பருவம் செய்யுள் 29.

† அத்திதருங்கவி - முப்பொருள் உண்மையைக் கூறும் கவி.

“நனவி லிரும்புகழ் மிகுசம் பந்தரும்
நாவுக் கிறையவரும்
நாவலர் கோவும் சிரகர கம்பித
நன்கு புரிந்தருள
முனிவில் தமிழ்க்கவி பாடிய புலவன்”

என்று சேக்கிழாரையும் அவர்பாடல்களையும் புகழ்ந்தனர். புராணவுரை நிறைவேறியபின் சேக்கிழாரையும் அவரியற்றிய புராணத்தையும் யானை மேலேற்றித் தானும் ஏறி ‘இணைக்கவரி துணைக்கரத்தால்’ வீசி ‘இதுவன்றோ யான்செய்த தவப்பயன்’ என்று அரசன் மகிழ்ந்து உலாவரச் செய்தனன். பின் தொண்டர்சீர் பரவுவார் என்ற திருப்பெயரைச் சேக்கிழாருக்குச் சூட்டி, அரசரும் ஏனையோரும் வணங்கினர். முன் நம்பியாண்டார் நம்பிகள் தொகுத்த பதினொரு திருமுறைகளோடு சேக்கிழார் பாடிய இப் புராணத்தையும் பன்னிரண்டாம் திருமுறை என்று நியமித்துச் செப்பேடுசெய்து நடராசர் சந்நிதியில் ஏற்றுவித்தார்கள். பின்னர்ச் சேக்கிழார் பெருமானும் தில்லைநகரில் அடியார்களுடன் கூடி அருந்தவந்தனிலிருந்தார்.

[அடுத்த இதழில் முடியும்]

துணை மாலையம்மை பிள்ளைத் தமிழ்க் கவிநயம்

திரு. T. H. விவேகானந்தம் பிள்ளை அவர்கள், B.A., B.T.
அறநிலைய உதவி ஆணையர், இராமநாதபுரம்,
மதுரை.

[மலர் 16. இதழ் 3-ன் தொடர்ச்சி]

அம்பிகை பளிங்காலாகிய அம்மானைக் காய்களை வீசி விளையாடுகின்றாள். தனக்கென்று ஒரு நிறமில்லாதது பளிங்கு. தேவியின் கையை அது பொருந்தும் போது பதுமராகமாகியும், மேனி அருகில் வருங்கால் மரகதமாகியும், மார்பருகே பொன்னாகியும். பல்லெதிரிலே முத்தாகியும், விழியருகே நீலமணியாகியும், பிற இடங்களில் பிறவாயும் காட்சி தருவது, தனக்கென்று ஓர் இயல்பின்றிச் சார்ந்ததன் வண்ணமாய்த் திரியும் உயிரின் இயல்பைப் போல்வதாம் எனக்கூறும் அம்மானை 77ஆம்செய்யுள் சைவ சாத்திரங்களில் இவர்க்குள்ள ஈடுபாட்டை உணர்த்துகின்றது.

தேவி திருவூசல் ஆடுகின்றாள். மாணிக்கவாசகர் இறைவன் திருவருள் பெற்று, அவ்வருள் அனுபவத்தைத் தம்முள் நினைந்து நினைந்து பாடிய திருவாசகம் என்னும் தேனில் பொதிந்துள்ள பொன்னூசற் பகுதியைக் கலைமகள்இனிய இசையாகிய அமுதைக் கூட்டிப் (தேனோடு பால் கலந்தது போல) பாடுகின்றாள். அவ்வமுதம் தேவியின். செவிவாயாக நெஞ்சிற் புகுவதால் அங்கு அவளுக்கு முன்பே இருந்த சிவபக்தியாகிய முதல் ஓங்கித் தழைத்து உலகமெல்லாம் இன்பமாகிய அமுதுண்ணக் கதிரீன்று சிவபோகம் விளைகின்றது. அத்தகைய கந்தசாலி (கந்தசாலி - ஒருவகை நெற்பயிர்) இறைவி என்னும் அரிய பொருள் தந்து நிற்கும் "பெருந்துறைக் கடல் புகுந்து" எனத் தொடங்கும் 102-ம் செய்யுள் ஒன்றே இவ்வாசிரியர் பத்திச்சுவை நனி சொட்டச்சொட்டப் பாடும் கவி வலவர் என்பதை விளக்கும். இனி, சாலி என்னும் சொல்லுக்குக் கற்பரசி என்னும் பொருளும் உண்டு. ஆகையால் கணவன் புகழைப் பிறர் கூறக் கேட்குந் தொறும் கேட்குந் தொறும் மகிழ்ச்சியடையும் கற்புடை மாதரியல்பும்

இதனால் பெறப் படுகின்றது. இச்செய்யுளின் முதன் மூன்றடிகள் உமாபதி சிவனார் அருளிய மாணிக்க வாசகர் துதிப்பாடலாகிய "பேசு புகழ் வாதவூர்ப்பிறந்து பெருந்துறைக்கடல் முகந்து" என்று தொடங்கும் திருச் செய்யுளைத் தனக்குள் அடக்கிக் கொண்டிருத்தலையும் பயில்பவர் எளிதில் உணரலாம்.

63-ம் பாடலின் ஒவ்வோரடியின் ஈற்றுச் சீரும் 'டகர' எதுகை பெற்று இன்னேசை பயக்கின்றது. அம்புலிப் பருவப் பாடல்கள் அனைத்தும் ஈடும் எடுப்பு மற்ற கற்பனை வளம் நிறைந்து பழமையும் புதுமையும் கலந்து, கற்போருக்குக் கழி பேருவகை தருவனவாய் அமைந்துள்ளன. பிராட்டி முத்துக் களாலான அம்மானையை வீச அது அபிராமிபட்டர்க்காக விண் மீது வீசிய குழையைப் போல்வது என்றும், (74), சூரியன் மனைவியாகிய தாமரை தன்னைச் சந்திரன் பொருந்த வருவது கண்டு வெருண்டு 'புல்லியனே' என்று சொல்லித் தள்ளுவது போன்றது என்றும் (75) கூறிய நயம் பாராட்டத்தக்கது. 82-ம் பாடல் இறைவிக்குரிய தசாங்கச் சிறப்பையும், 83-ம் பாடல் சுழியலுக்கமைந்த பிறபெயர்களையும் கூறுவன. தேவியின் தசாங்கச் சிறப்பு, கவியரசு அவர்கள் இயற்றிய "பழநியாண் டவர் மயில் விடு தூது" என்ற நூலில் சொல்லும், விசாகப் பெருமானின் தசாங்கச் சிறப்பு நினைவுக்கு வருகிறது. பவகரி நதிப் பெருக்கை இறைவன் திருவருள் வெள்ளமென்றும், திரு வருட்சரித நதி என்றும், தொண்டர் உள்ளத்தூறும் பக்திப் பெருக்கென்றும் உவமை கூறும் நீராடற்பருவப் பாடல்கள் சுவைக்கத் தக்கன-98,99ஆம் பாடல்கள் முறையே இறைவியின் அருளால் பாடப்பட்ட வடமொழி தென் மொழி நூல்களை அறி விக்கின்றன. ஆதி சங்கரர் போன்ற வடமொழிப் பெரியோர் பாடிய நூற் கருத்துக்களும் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன. "தையல் நீ புனலாடல் நினைப்பவர் சுரப்பிணி ஒழிப்பர் என மறை புகலும்" எனக் கூறும் 94ஆம் பாடல் அம்பிகை நீராடும் கோலத்தைத் தியானிப்பவர்க்குச் சுரநோய் அகலும் என்ற தந்திர சாத்திரக் கருத்தை எடுத்தியம்பிப் பிறவியாகிய கொடிய சுர நோய் தீரும் வழியையும் நமக்குத் தெரிவிக்கின்றது. எண்ணரிய மகிமைக் குணங்கள் எல்லாம் சேர்ந்து ஈசனுக்கு ஒருபாகம்; ஆனால் அவன் பெருங்கருணையே இடப்பாகம். அக்

கருணையமுதம் பெற்றவர் பெற்ற பேறுகளை எல்லாம் வியந்து தம் கவியும் புண்ணியம் பெறுவதைத் தேவியிடம் விண்ணப் பித்துக் கவிஞர் இந்நூலை முடிக்கின்றார். இவ்வீற்றுச் செய்யுளும், அதன் முன்னைய சில செய்யுட்களும் தியான சுலோகங்கள் எனலாம்.

முடிப்புரை

இத்தகைய பலவகை நயங்களும், பத்திச் சுவையும், தேவியின் லீலா விபூதியைக் குறிப்பனவாகிய வடமொழி, தென் மொழி நூற்கருத்துக்களும், கற்பனை வளமும் ஒருங்கமைந்த இச்செழுநூல் நீடுநின்று நிலவுவதாக; துணைமாலையம்பிகையின் தண்ணருள் எங்கும் தங்குவதாக; இந்நூலை நிறைவு செய்து தந்த, கண்மணி கவியரசு அவர்களுக்குத் தேவியின் திருவருள் மிகுவதாக.

தமிழன் வல்லமை

திரைகடலோடியும் திரவியம் தேடினவன் தமிழன். அன்று பட்டினத்தடிகளுக்குக் கப்பல்கள் ஓடின. சோழநாட்டுச் சிங்கங் களும், கலிங்கத்து வீரர்களும் கடல் தாண்டிச் சென்றனர். கவுண்டினியகோத்திர அந்தணன் மத்திய ஆசியாவிலுள்ள கோஷ்டான் சென்று, ஏழாண்டுகள் கொடிய தவம் செய்தான்.

புத்தபகவானது பிரிய சிட்ன் மொத்கல்யகோத்திர அந்த ணன் (மௌகல்லாயனு) காஞ்சிமாநகர் வாசியாம்.

அக்பர் பாதுஷா காலத்தில் உருது பாஷையில் வல்லமை பெற்று தர்காஸ்து கொடுத்து காசி கேதார கட்டத்தில் நிலம் பெற்றார் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள். எனவே திருப்பனந்தாளாதீனத் திற்கு காசிவாசி என்ற விருது கிடைத்தது.

தவிர, மகா மகோ உ. வே. சுவாமிநாதய்யர் அடியேனிடம் கர்ணபரம்பரையாக வந்த ஒரு அரிய தகவல் கொடுத்தார். ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் காசியில் கம்பராமாயண பிரவசனம் உர்துவில் பண்ணும் பொழுது அதைக் கேட்டு ஆனந்தித்தவருள் ஒருவர் கோசுவாமி துளசிதாசர்.

எனவே தமிழன் பல மொழிகளைக் கற்று வல்லமையடைய முடியும். அலிகார் சர்வகலாசாலையில் இந்தியில் முதல் இடம் பெற்றவன் இந்த ஆண்டில் ஒரு தமிழனே.

பேராசிரியர், கே. ஆர். ஆர். சாஸ்திரி, எம். ஏ., எம்., எல்.
சென்னை-4.

சுந்தர மூர்த்தி சுவாமிகளின்

அற்புதத் திருப்பதிகங்கள்

Hymns of St. Sundarar

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி.

On his way to Tiruvarur he visited Tiruppanaiyur at the request of the people. The festival at Tiruvarur went off well.

After a few days St. Sundarar set out to visit the shrines. At Tiruvalampozhil, Lord Siva appeared in his dream and asked whether he (Sundarar) forgot to visit Tirumazhapadi. St. Sundarar went to that place and sang in praise of Siva. Then he proceeded on his pilgrimage and at Tiruppacchilachiramam requested his Master to help him with some money and got it. On his way he missed Tirukkudalaiyarrur and wended his way towards Tirumudukunru. But a Brahmin, whom he asked to direct him to wards Tirumudukunru, deliberately showed Sundarar the way that led to Kudalaiyarrur. From there he went to Tirumudukunru and there once again prayed for gold. It was granted and he put it in the nearby river and requested Lord Siva to transport it to Tiruvarur. As soon as he returned to Tiruvarur he took Paravaiyar and his followers to the tank and retrieved from it the gold, which he put in the river at Tirumudukunru.

After a few days rest at Tiruvarur, St. Sundarar resumed his visit to the shrines. On his way he visited

the shrine at Tirukkolakka where St. Sambandar received a pair of gold cymbols From there he went to Tirukkurugavur with his followers. All of them were hungry, thirsty and tired. On the way an old Brahmin had set up a pandal and was ready with food and water. As soon as St. Sundarar approached the pandal he offered the food. St. Sundarar did not decline the offer. The quantity of the food also increased to cater one and all. All of them had a nap for a while and when St. Sundarar woke up he found neither the Brahmin who fed him and his followers, nor the pandal. He realised it was only Lord Siva who took the trouble of feeding him. He was overwhelmed with joy and gratitude and expressed them in his hymns.

திருக்குருகாவூர் வெள்ளடை: பண்: நட்டராகம்

இத்தனை யாமாற்றை அறிந்திலேன் எம்பெருமான்
பித்தரே என்றும்மைப் பேசுவார் பிறரெல்லாம்
முத்தினை மணிதன்னை மாணிக்கம் முளைத்தெழுந்த
வித்தனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

"I was not aware of this much, my Lord. Others call you a mad one; but you are a pearl, a gem. And you are the wealth at the Velladai of Kurugavur".

(Velladai-name of the temple.)

———— (To be continued)

சமுதாயக் கவிஞன்

திரு. ஆறு. அழகப்பன், அவர்கள், எம். ஏ.,
தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலைநகர்.

மலர் 16. இதழ் 3-ன் தொடர்ச்சி

பாரதி மனம்

தம் காலச் சமுதாயத்தைக் கண்டு, அஞ்சாது மறைக்காது பாடிய பாரதியாரின் மனம் மிகத் துணிவானதாகும். அவர் ஆத்தி சூடியில் எழுதியுள்ள 'அச்சம் தவிர்' "கேட்டிலும் துணிந்து நில்," "கொடுமையை எதிர்த்து நில்" என்ற மொழிகள் அவருக்கே பொருந்துவன எனலாம்.

அரசு துறந்து அரசமரம் ஏகிய புத்தர், அரசு வெறுத்து அடிகளான இளங்கோ, பரத்தமைத் தொழில் வெறுத்துப் பண்பு மகள்களாக ஒளிவிட்ட மாதவி, மணிமேகலை ஆகிய இவர்களின் மனங்களோடு பிராமண குலத்தில் தோன்றிச் சீர்திருத்தக் கருத்துக்களை வெளியிட்ட பாரதியாரின் மனமும் ஒத்து எண்ணத் தக்கது.

குலப்பாடல்

பாரதியார் தாம் பிறந்த குலத்தைச் சாடிப் பாடிய பாடல்கள் நாம் அறிந்ததே; பிறந்த சமூகத்தின் பழக்க வழக்கங்கள் பாரதியாருக்கு வெறுப்பைத்தர அவ்வெறுப்புக்கள் வசை கலந்த கவிதைகளாக மலர்ந்தன. கவிஞன் தனக்குத் தோன்றிய உணர்ச்சியை மறைக்காமல் அப்படியே வெளியிட்டான் என்பதற்குத் தம் குலத்தைப்பற்றி அவர் பாடிய பாடல்கள் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

பெண்டிர் நிலைமை

பிறந்த மண் அடிமைப் பட்டிருப்பதைப்போல பாரதப் பெண்களும் வாழ்வில் விலங்கு பூட்டப்பட்டிருக்கிறார்கள் என்று தம் காலத்தில் இருந்த பெண்களின் நிலையைக் கண்டு, நாட்டு விடுதலைப் பாடல்களைப் போல பெண் சமூக விடுதலைப் பாடல் களையும் பாடினார். தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் சகத் தினை அழித்திடுவோம் என்ற அவரது "அழிவு வீரம்" பெண் களுக்கு வாழ்வில் இழிநிலை என்பதனைக் கண்டவுடன் 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்" என்ற 'தீ' வீரமாக வெளிப்படுகின்றது.

மறவன் பாட்டு

பாரதியார் தம் காலத்தில் வாழ்ந்த சமீன்தார்கள், பிரபுக் கள், கிழார்கள் இவர்களைப் பாடியிருந்தால் பொன்னும் பொரு ளும் கைநிறையப் பெற்று, உடம்பில் பட்டு வேட்டியும் சரிகைத் துண்டும் தோற்ற மளிக்க மனம் நிறைந்த வாழ்க்கை வாழ்ந் திருக்க முடியும். சமுதாயம் என்பது அவர்களை மட்டும் கொண்டது அன்று என்றுணர்ந்த பாரதியார் வண்டிக்காரன் பாட்டும், மறவன் பாட்டும் பாடினார். விண்முட்டப் புகழ்பெற்ற தமிழ் மறவன் ஒருவன் சோற்றுக்காக மண்வெட்டிக் கூலி பெற்றுச் சோறுண்ணும் நிலையை எண்ணி நொந்து பாடும் "மற வன் பாட்டு" பாரதியாருக்கிருந்த சமுதாயக் கண்ணோட்டத்தை மிகத் தெளிவாகக் காட்டுவதாகும்.

கோணங்கி

இம் மறவன் பாட்டு மன்றிப் பாரதியார் குடுகுடுப்பைக் காரன் வேடத்தில் வந்து வீடு வீடாகச் சென்று தன் கோணங் கிப் பாட்டு மூலம் கருத்துப் பிச்சைகளை வீட்டிற்கு வீடு அள்ளிப் போட்டுச் செல்லும் பாடல் பாரதியார் தனக்குத் தோன்றும் எண்ணங்களை மறைக்காமல் வெளியிடுகின்றார் என்பதற்கு ஒரு தலையான எடுத்துக் காட்டாகும். கோணங்கிப் பாட்டில் ஒரு கருத்து, "படித்தவின் சூதும் பாவமும் பண்ணினால் போவான் போவான் ஐயோ வென்று போவான்".

வெளிநாட்டில் தமிழர் துன்பம்

இன்று பர்மாவிலிருந்து வரும் தமிழர்களை நேரிடையாகக் கண்டும், அவர்கள் கண்ணீர் சொல்லும் கதைகளை மனம் நெகிழக் கேட்டும் கவிதைகள் இன்னும் தோன்றாத இன்றைய உலகில் வெளிநாடுகளில் மாடுகள் போல உழைக்கும் சோதரிகளுக்காக, அவர்கள் விம்மி விம்மி அழும் குரல் கேட்பதாக, 'கரும்புத் தோட்டத்திலே' என்று அவர் பாடிய பாடல் கவிஞரின் இளகிய நெஞ்சத்தைக் காட்டுகின்றது. பிற நாடுகளில் துன்பப்படும் தமிழர்களுக்காக அழுத தலைமைக் கவிஞராகவும் விளங்குகிறார்.

சரிநிகர் சமுதாயம்

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற வள்ளுவத்தை 'முரசு'ப் பாட்டில் குழந்தைகளுக்கும் உணர்த்த நினைத்த கவிஞர் வெள்ளைப்பூனை யொன்று குட்டிகள் போட்ட கதையைச் சொல்லி நிறவெறி கூடாது என்று சமமான ஒரு சமுதாயம் வேண்டும் என்று வற்புறுத்துகின்றார். எல்லோரும் ஓர் இனம்; எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற கொள்கையும் 'ஏழை யென்றும் அடிமை யென்றும் எவனுமில்லை சாதியில்' என்ற சரிநிகர் சமுதாய நோக்குடைய பாரதியாரின் இத்தகைய பாடல்கள் நிறவெறி தாண்டவமாடும் நிலமெல்லாம் மொழி பெயர்த்துவழங்கப்பட வேண்டியவைகளாகும்.

தலை சிறந்தவர்

மன்னர்களையும் மகேசர்களையும் பாடிவந்த கவிஞர்கள் வரிசையில் ஒரு சில கவிஞர்கள்தான் சமுதாயத்தைக் கவிதைகளுக்குரிய பொருளாகக் கொண்டு பாடியிருக்கின்றனர். அவ்வகையில் பாரதியார் காலத்தில் இருந்த குலவழக்கம், பெண்கள் நிலைமை, மறவர் வாழ்வு, வெளிநாடுகளில் தமிழர் படும் துன்பம், நிறவெறி போன்றவைகள் அவரது கவிதைகளுக்குரிய பொருள்களாக அமைந்து காலத்தைக் காட்டும் நல்ல "சமுதாயக் கவிதைகளாக" மலர்ந்திருக்கின்றன. "நெஞ்சு பொறுக்குதிலையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைத்து விட்டால்" என்று சமுதாயத்தைப் பார்த்துக் கோபப்படும் பாரதியார் நம் நூற்றாண்டில் தலைசிறந்த ஒரு சமுதாயக் கவிஞனாகத் திகழ்கின்றார்.

யான் கண்டவாறே....

வித்துவான், திரு. ம. வே. பசுபதி அவர்கள்,
தமிழாசிரியர், கும்முடிப்பூண்டி.

—ooOoo—

எடுப்பு:

'உலகில் வரும் இருள்நீக்கி ஒளிவிளங்கு கதிர்போன்று அலகில் கலைத்துறை தழைப்ப அருந்தவத்தோர் நெறிவாழ' அவதரித்தவரும், "பாவுற்றலர் செந்தமிழின் சொல்வளப் பதிகத் தொடை பாடிய பான்மையால் நாவுக்கரசு என்று உலகு ஏழினும் நின்னுமம் நயப்புற மன்னுக" என வீரட்டம் அமர்ந்த பிரான் அருள் வாய்மை எழுப்பப் பெற்ற பேறுகொண்டவரும், "நாணில் அமண் பதகருடன்[1] ஒன்றிய மன்னவன் சூட்சி[2] திருத் தொண்டின் உறைப்பாலே வென்றவரும் ஆகியவர், செம்மையே புரி திருநாவுக்கரசர். இத்திருநாவுக்கரசர் என்னும் திருநாமத்தை "எழுதியும் பேசியுமே துன்பில்பதம் பெற்ருன் ஒருநம்பி அப்பூதி என்னும் பெருந்தகை!" இங்ஙனம் அப்பூதியடிகள் முத்திபெறக் காரணமாயிருந்த அப்பர் பெருமான் நூற்றிருபத்தாறு சிவத் தலங்களில் பாடியருளிய பத்தித் தமிழிசைகள் நான்கு, ஐந்து, ஆறு திருமுறைகளாக இலங்குகின்றன. அப்பாமாலைகளிலே அப்பர் பெருமான், இறைவனை எண்ணினுல் இவ்விவை மனக்கண் முன் தோன்றுமென்கிருர்; இப்படிப்பட்டவர் போலும் இறைவர் என ஆய்கிருர்; தன் அங்கங்களை அழைத்து, 'ஆண்டவன் உகக்கும் தொழிலைச் செய்க' எனக் கட்டளையிடுகிருர்; 'இறைவனே உன்னையல்லால் யாதும் நான் நினைவிலேன்' என்கிருர்; 'அத்தனை அடியேன் மறந்து உய்வனே' என்கிருர்; மேலும், இறைவனை யான் இன்னவண்ணம் கண்டேனெனவும் கூறு கின்ருர்! அங்ஙனம் 'கண்டேன்' எனக் கூறிய நாவரசரின் நற்றமிழ் மாலைகள் இவை:–

1. பதகர் = பாதகர். 2. சூட்சி = சூழ்ச்சி.

1. திருநாரையூர்த் திருத்தாண்டகம் (6-ந் திருமுறை)
2. திருக்கஞ்சனூர்த் திருத்தாண்டகம் (6-ந் திருமுறை)
3. திருவையாறு 'மாதர்ப் பிறைக்கண்ணி' பதிகம் (4-ந் திரு முறை)
4. திருக் கற்குடித் திருத்தாண்டகம் (6-ந் திருமுறை)
5. திருப்பூந்துருத்தித் திருத்தாண்டகம் (6-ந் திருமுறை)
6. திருத்துருத்தித் திருநேரிசை (4-ந் திருமுறை)
7. திருச் செங்காட்டடங்குடித் திருத்தாண்டகம் (6-ந்திருமுறை)
8. திருவாய்மூர்த் திருத்தாண்டகம் (6-த் திருமுறை)
9. திருப்பாசூர்த் திருத்தாண்டகம் (6-ந் திருமுறை)

இவையேயன்றித் திருக்கழுக்குன்றம் திருத்தாண்டகமும் (6-ந் திருமுறை) இறைவனைக் கண்டமையைச் செப்புகிறது. எனினும் அத் திருத்தாண்டகத்து இருபாடல்களே கிடைக்கப் பெறுகிறோம். வினவிடைப் பதிகத்துள்ளும் 6,7,8-ம் பாடல்களில் இறைவனை 'இவ்வண்ணம் கண்டேன்' எனக் கூறுகிறார், நாவரசர்!

கண்டேன்

நாவரசர் பெருமான் மேலேகுறித்த சிவத்தலப் பதிகங் களுள் இறைவனை எவ்வண்ணம் கண்டதாகக் கூறினாரோ அவற்றில் சிற்சில காண்போம் :—

நாரையூர் நன்னகரில் இறைவனைக் கண்டேன்; என் நெஞ் சங்கவர்ந்த நினைவாகவும் (செய். 1), முடிவற்ற முதலாகவும், முடிவற்ற நடுவாகவும், முடிவற்ற முடிவாகவும் (செய். 3), மறவாத மனங்களில் நிலைபெற்றவனாகவும் (செய். 6) கண்டேன்!

கஞ்சனூர் ஆண்ட கோவைக் கண்ணாரக் கண்டேன்; உய்ந் தேன்! அயன், மால் ஆகத் தானே உள்ளவனாக (செய். 1) மெய் யாகவும், பொய்யாகவும், விதியாகவும் இருப்பவனாகப் (செய். 4) புகழ்பவர்க்குத் தேன் போன்றவனாக (செய். 8), மேலோர் போற்றும் கருத்தில் உள்ளவனாகக் (செய். 9) கண்டேன்!

ஐயாறு அடைகின்றபோது ஆண்டவனைக் களிறாகவும் கோழியாகவும், குயிலாகவும், மயிலாகவும், அன்றிலாகவும், கலை மானாகவும் நாரையாகவும், கிளியாகவும், ஏறாகவும் கண்டேன்!

கற்குடிக் கற்பகத்தைக் கண்டேன், மண்ணில் ஓசை ஊறு உருவம் சுவை நாற்றம் என்று ஐந்து ஆகியும், நீரில் ஓசை ஊறு, உருவம், சுவை என நான்கு ஆகியும், எரியில் ஓசை ஊறு உருவம் என்னும் மூன்று ஆகியும், காற்றில் ஓசை, ஊறு என்ற இரண்டு குணங்களாகியும் (செய். 3) ஒருவரும் தன் பெருமையை முற்றும் அறிய ஒண்ணுதவனுகக் கண்டேன் (செய். 7).

பூந்துருத்திப் பொய்யிலியைக் கண்டேன்; யான் இது வரையில் கல்லாதன வெல்லாம் கற்பித்தவனுகப், பயிலாதன வெல்லாம் பயிற்றுவித்தவனுகக், காணுதனவெல்லாம் காட்டுவித்தவனுகச், சொல்லாதவற்றை யெல்லாம் சொல்லி என்னைத் தொடர்ந்த அடியவனுய் ஆக்கிக்கொண்டவனுக (செய். 1) வஞ்சகர் மனத்தில் நில்லாதவனுகக் (செய். 3) கண்டேன்!

செங்காட்டங்குடிச் செல்வனைக் கண்டேன்; என் இதய கமலத்து எழுந்தருளியவனுக (செய். 1), இயங்கு பொருள்கட்கும் இயங்காப் பொருள்கட்கும் தாயானவனுக, எளியேன் பந்தங்களை அறுத்து ஆளாக்கிப் பணிகொண்டு தமிழ்க்கவி பாடச் செய்து மனமயக்கத்தைப் போக்கிய திருவருளுடையவனுகக் (செய். 4) கற்காதவரின் உள்ளத்தின் பக்கமும் அணுகாதவனுகக் (செய். 8) கண்டேன்!

வாய்மூர் அடிகளை வணங்கிக் கண்டேன்; பலப்பல வேடங் கொண்ட வரலாற்றுருவாக (செய். 3) என்மனத்திலே இது நாள்வரை வைத்திருந்த உணர்ச்சியின் வடிவாகக் (செய். 5) கண்டேன்!

பாதூர் மேய பரஞ்சுடரைக் கண்டேன்; கணிதம் இலக்கணம், கண் காட்சி பண் ஆகியவையானவனுக (செய். 1) விளக்கமான பொருள்களுக் கெல்லாம் மூல காரணமானவனுகக் (செய். 2) கண்டேன்!

கழுக்குன்றம் அமர்ந்த காவலனைக் கண்டேன்; சொல்லும் அதன் பொருளும் அனைத்து மானவனுகக் கண்டேன்! (செய். 2)

மறைவல்ல மாதவனுக (வினுவிடை 7), நீறு ஏறிய திருமேனியனுக, அடியவர்க்கு இனிய அமுதமானவனுகக் கண்டேன்! (வினுவிடை 8) மேலும் கனவில் இறைவன் தோன்றினுன்; அப்

போது பட்டமும் தோடும் பொலியக் கண்டேன்; உலகம் விளங்கப் பலியேற்றுத் திரிதலையுங் கண்டேன்; லயங்கள் முழங்கி ஆடக்கண்டேன்; காதில் குழையும் சென்னியில் பிறையும் விளங்கக் கண்டேன், திண்மையான தோளிலே கட்டாங்கக் கொடி ஆடக்கண்டேன்; மழுவையும் வாளையும் வலக்கையிலே கண்டேன்! (வினவிடை 6)

யான் கண்டவாறே

இங்ஙனமெல்லாம் இறை நிலை கண்டு அப்பேரின்பச் சுவையைப் பாவாலே உலகுக்கு உவந்தளித்த நாவுக்கரசர் பெருமான் திருத்துருத்தியில் பாடிய பதிகத்தில் பிறமக்களையும் அப்பேரின்ப வழிக்குச் செலுத்துகிறார். அப்பதிகக் கருத்தைக் காண்போம்:-

உலகீர்! நான் தொண்டன்; யான்கண்டவாறே நீங்களும் இறைவனைக் காணுங்கள். நிலையா உடலைப் பொருளென மதிக்க வேண்டா. எப்போதும் நெஞ்சுள் இறைவனை ஏத்துங்கள்; இறைவனையே ஏத்துங்கள்! தொண்டனேன் துருத்தியானைக் கண்டவாறு இயம்புகின்றேன்.

சுடராகக் கண்டேன்; அச்சுடர் ஒருத்தியைப் பாகம் வைத்து, மற்றொருத்தியைச் சடையில் வைத்திருந்தது கண்டு மகிழ்ந்தேன். (செய். 1) அச்சுடர் நஞ்சுண்டு கறுத்திருந்தாலும் கண் கூசும் காணரிய பேரொளி பெற்றிருந்தது (செய். 5)

சுவையாகக் கண்டேன்; அடியவர்கட்கு அருளிச் செய்த சுவையது; அடியவர்கட்கு மட்டுமே அது சுவையாகும்! ஏனெனில் முப்புரத்தாரை அச்சுவையே யன்றோ அழியச் செய்தது!

நீராகக் கண்டேன்; அவன் தலையிலும் நீர் (கங்கை). அவனெழுந்தருளிய தலமும் நீர்! (திருத்துருத்தி காவிரி நாட்டகத்தது)

தலைவனாகக் கண்டேன்; தேவருலகத்துத் தேவரெல்லாம் 'தேவதேவா' எனப் போற்றும் தேவர் தலைவனாகக் கண்டேன்!

வள்ளலாகக் கண்டேன்; வானவர்களும் காணமுடியாத வள்ளல்; அவ்வள்ளல்!

சோதியாகக் கண்டேன்; பிரமனும் திருமாலுங் கூடக் காணுச் சோ தி என் கண்ணிற் பட்டது!

தூயமனத்தவனுகக் கண்டேன்; சோமனேச் சடையில் வைத்துத் தொன்னெறிகள் காட்டும் தூய மனத்தவனுகக் கண்டேன்!

தொண்டர் துணேவனுகக் கண்டேன்; முப்புரமெரித்த அவன் தான் தொண்டர்களுக்கு துணே செய்தான்; தூயவானவர்க்கு அருள் செய்தான்: அரக்கனேக் கால்விரலால் அழுத்தி மீண்டும் மன்னித்து அருள்செய்தான்! இங்ஙனமாய தொண்டர் துணே வனேத் துருத்தியில் கண்டேன்.

பயனற்றவை செய்து வாழ்கின்றீர்! நீரிலழிந்து போமிவ் வாழ்வை நிலேயென மதிக்காது இறைவனே ஏத்துங்கள்! 'உன்னி எப்போதும் நெஞ்சுள் ஒருவனேயே ஏத்துங்கள்' உடல் சுமக்கும் உலகத்து உயிர்களெல்லாம் இடர்நீக்கிக் கொள்ள வேண்டு மாஞல் இறைவனே ஏத்தட்டும்! பிறவிச் சேற்றைக் கடக்க வேண்டுமாஞல் பெருமானே ஏத்தட்டும்! அழியும் மனேவாழ் வாகிய பிழையில் அழுந்தாது உய்யட்டும்! குண்டராம் சமணரும் புத்தரும் குறிக்கோளில்லாமல் மனத்தில் கண்டதே உண்மை யெனக் கருதுவார்கள், அதை எண்ணுது. அத்திசை திரும்பாது இறைவனேத் தொழுதுய்யட்டும்!

"பிண்டத்தைக் கழிக்கவேண்டிற் பிரானேயே பிதற்றுமின்கள்"!

இவையே திருத்துருத்தித் திருநேரிசையில் காணும் செய்திகள்.

கண்டவர் விண்டனர்

இறைவனே இவ்விவ் வண்ணமெலாங் கண்டேன் எனத் தெளிய உரைத்த திருநாவுக்கரசு சுவாமிகள் அத்துடன் நில்லாது இங்ஙனம் முயற்சி செய்யின் இறைவனேக் கண்டு இழி பிறப் பொழியலாமெனவுங் கூறுகின்ருர். பொதுவாய தனித்திரு நேரிசையிலேஒதோர் வாக்கு :—

உடம்பெனும் மனேய கத்துள்
உள்ளமே தகளி யாக
மடம்படும் உணர்நெய் யட்டி
உயிரெனும் திரிம யக்கி

இடம்படு ஞானத் தீயால்
எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை
கழலடி காண லாமே!

நல்லதோர் முத்தி வழியை நாவுக்கிறையவர் இப்பத்திப் பாட லான் உலகுய்ய விளக்குகிறார். "உடம்பாகிய வீட்டிலே உள்ள மாகிய தாழியிலே அறியாமையை அழிக்கும் அறிவுணர்ச்சி யாகிய நெய்யை ஊற்றி, உயிர் என்னும் திரியை இட்டு, ஞான மாகிய தீயினாலே அவ்வுயிர்த் திரியைக் கொளுவிப் பொறுமை யோடு தியானம் செய்யின் கடம்பமர் காளையைக் காணலாம்" என்கின்றார். 'காணலாமே' என்ற சொல்லாட்சி 'எனக்கு இது மிக எளிது' என்னும் பொருளை உட்கொண்டுள்ளது.

முடிப்பு

இங்ஙனமெல்லாங் கூறியும் முடிவாக இறைநிலையை அறுதி யிட்டுரைத்தல் அயன் மாலுக்கும் அரிதாகலின் "மையுண்ட கண்ணாளாகிய உமையோடுறை ஈசன் கச்சி மயானத்தவன்; நீண்ட சடையவன் என்று சொல்வதைத் தவிர வேறோர் ஒப் புடையவனல்லன்; ஒரு ஊரினனல்லன்; ஒருவமை உடைய வனல்லன்! அவன் இருக்கும் நிலையையும், அவன் நிறத்தையும், அவன் வண்ணத்தையும் அவனருள் காட்டக் காணுதலன்றி, 'அவன் இப்படிப்பட்டவன், இந்நிறத்தவன், இவ்வண்ணத்தவன், இவன்தான் இறைவன்' இறைவன் என்று முடிவாக எழுதிக் காட்ட இயலாது" என்கின்றார். அம்முழுதுணர் முதுமொழி இதோ:—

"மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி
மயானத்தான்; வார்சடையான்; என்னி னல்லால்
ஒப்புடையன் அல்லன்; ஒருவன் அல்லன்;
ஒரூரன் அல்லன்;ஒ ருவம னில்லி!
அப்படியும் அந்நிறமும் அவ்வண் ணமும்
அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே!"

— அப்பர்,

முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்

உ ரை ந டை

பாலகவி வயிநாகரம்,
திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

(மலர் 16. இதழ் 3-ன் தொடர்ச்சி)

செங்கீரைப் பருவம்

இருக்கோ லிடும்பரி புரக்கோல முந்நுதலில்
இட்டபொட் டுஞ்சுட்டியும்
எரிமணிப் பட்டமுங் கட்டுபொன் னரைஞாணும்
இளஞாயி றுதயஞ்செயும்
உருக்கோல முஞ்சூழி யக்கொண்டை யும்முச்சி
உச்சியும் வாளிமுத்தும்
ஒள்ளொளி ததும்புங் குதம்பையுங் கண்டுகண்
டோடரிக் கண்களிக்கும்
மருக்கோல நீலக் குழற்றைய லாட்கரு
மருந்தா யிருந்ததெய்வ
மகக்கோல மேழுதிர் கிழக்கோல மாய்க்குற
மடந்தைமு னடந்துமற்றத்
திருகோல முடனொரு மணக்கோல மானவன்
செங்கீரை யாடியருளே
செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள
செங்கீரை யாடியருளே. (12)

வேதங்கள் ஓலமிட்டு அரற்றுகின்ற சதங்கையின் அழகையும், நெற்றியில் இட்ட பொட்டையும், சுட்டியையும், ஒளி வீசுகின்ற மணிகள் பதித்த பட்டத்தையும், கட்டப்பெற்ற பொன் அரைஞாணையும்,இளஞ் சூரியன் உதித்தாற் போன்ற உருவழகையும், சூழியக் கொண்டையையும், அக் கொண்டையை யுடைய

உச்சியையும், மேற்காதில் அணியப்பெற்ற வாளிமுத்தையும், பேரொளி வீசுகின்ற தக்கையையும் பார்த்துப் பார்த்து, 'ஓடு கின்ற செவ்வரி படர்ந்த விழிகள் களிப்பையும் நறுமணம் தங்கிய அழகிய கருமையான கூந்தலை யுடைய தையல் நாயகிக்கு, அருமருந்தாயிருந்த தெய்வக் குழந்தைக் கோலமே, மூதிர்ந்த கிழக்கோலமாய்க் குற மடந்தையாகிய வள்ளி அம்மை முன்னே நடந்து, அந்தக் கிழத்திருக் கோலத்துடன் ஒப்பற்ற மணக்கோலமாய் வந்தவனே! செங்கீரை ஆடி அருளு வாயாக! செத்துப் பிறக்கின்ற தெய்வங்களுக்கு மணவாளனே! செங்கீரை ஆடி அருளுவாயாக!

(தொடரும்)

பந்தங்கள் தீர்ப்பான் கோயில்

ஆதிரை,
குமர குருபரர் கல்லூரி.

வெண்மணல் குன்றம் தோன்றும்
விரிகடல் அலையும் தோன்றும்
தண்மரக் காவும் தோன்றும்
தரங்கநீர்ப் பாட்டும் தோன்றும்
கண்ணுதற் கடவுட் பிள்ளைக்
கடற்கரைக் கோயில் தன்னில்
கண்பொழி கருணை வெள்ளக்
காட்சியே எங்கும் தோன்றும் 1

அன்பெலாம் நெஞ்சில் தோன்றும்
அருளதே விழியில் தோன்றும்
என்பெலாம் உருகும் காட்சி
எழில்வடி வேலில் தோன்றும்
முன்பெலாம் அன்பே இன்றி
முரணினோர் நெஞ்சில் கூட
பண்பெலாம் தோன்றும் பார்ப்பார்
பார்த்திடப் பரிவே தோன்றும் 2

கந்தனே முருகா என்று
கரங்குவித் திடுவார் முன்னே
பந்தங்கள் தீர்ப்பான் கோயில்
பனிக்கடல் ஓரந் தோன்றும்
செந்தில்மா நகரில் வாழும்
சேயவன் முருகன் கோயில்
சிந்தையில் தோன்றுந் தோறும்
செழுந்தமிழ்ப் பாட்டே தோன்றும் 3

சிவபோகசாரம்—"அறியும் பகுதி"

திருமதி தர்மா ராஜாராமன் அவர்கள்

திருமை ஆதீனத்து முதற்குரவராகிய ஸ்ரீகுருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய பல நூல்களுள் சிவபோக சாரமும் ஒன்ருகும். பதிஞேரு பகுதிகளாகப் பகுக்கப்பட்டு நூற்று முப்பத்து ஒன்பது வெண்பாக்களால் இயன்ற இந்நூல் சிவநெறி நின்று ஒழுகுவோருக்குச் சிவாநுபவச் செல்வங்களைத் தெளிவாக விளக்குகிறது. இந்த நூலுள் மூன்ருவது பகுதியாக விளங்கும் "அறியும் பகுதி" என்னும் பகுப்பிலிருந்து ஒரு வெண்பாவை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

குருநாதனுக்குரிய வணக்கத்தை முதற் பகுப்பில் கூறி இரண்டாவது பகுதியில் இறைவனைப் பெறுதற்குத் தடையானவற்றைக் கூறி அதே இறைவனை அடைதற்குரிய கருவிகளையும் படிகளையும் உணர்த்துகிருர் குருஞானசம்பந்தர். அதன் பின்பு அறியும் பகுதியை வைத்துள்ளார்.

இந்தப் பகுதி இறைவன் இவன் என அறியச் செய்வது. சிவம் என்பது இன்னது, இன்னது அன்று என்று தெளிவாக நமக்குப் புலப்படுத்துகிருர் சுவாமிகள். இவ்வுலக ஆசாபாசங்களில் கிடந்து உழலும் ஆன்மா, உருவையும், அருவையும், ஒளியையும், வெளியையும், இருளையும் சிவம் என்று எண்ணுகிறது. ஆனுல் இவை யாவும் சிவமல்ல. உலக மருளை நீக்கி, மாயையை நீக்கி, அறிவினுல் உணரப்படுவதே சிவம். இதனை ஒரு வெண்பா உணர்த்துகிறது.

"உருவை அருவை ஒளியை வெளியை
இருளைச் சிவமென் றிராதே—மருளைப்
பிறிந்தறிவிற் கண்டதனைப் பின்னமற எங்குந்
செறிந்தபொருள் தானே சிவம்."

இதனைத் துருவி ஆராய்வோம். உரு என்பது ஈண்டு பிரபஞ்சத்தை உணர்த்துவதாகக் கொள்ளலாம். நாம் நித்தம்

மேல் கண்ட கட்டுரை, சென்னை அமிர்தவசனி ஆசிரியரின் அனுமதியுடன் பிரசுரிக்கப்படுகிறது.

காணும் பொருள்களுள் நமது சிற்றறிவிற்கும் சிறிய திருஷ்டிக்கும் பெரிதாகத் தென்படும் பொருள் பிரபஞ்சமாகும். அரு என்பது உருமாய்ந்த நிலை. காணும் யாவற்றுள்ளும் மிகப்பெரியவன் என்பதனுல் இறைவனை உருவாகவும், கண்ணுல்கண்டு இத்தகையவன், இவ்வண்ணத்தன், இவ்வுருவத்தன் என்று அறியவொண்ணுததால் அவனை அருவாகவும் ஆன்மா எண்ணுகிறது.

இனி இவ்வுலகில் ஒளி ஒன்றுமே மற்ற எல்லாப் பொருள்களையும் விளக்குகிறது. இறைவன் மற்ற எல்லாப் பொருள்களையும் விளக்கித்தான் ஒருவன் மட்டுமே விளங்காமல் நிற்றலால் அவனை ஒளியாக எண்ணுவது உண்டு.

வெளியாகிய ஆகாயத்திலே ஆண்டவன் சர்வவியாபியாக இருக்கிருன் என்பதனுல் அவனை வெளியாக ஆன்மா எண்ணி மயக்குறுகிறது.

இருளையும் ஆன்மா சிவமாக நினைக்கிறது. இருள் யாண்டும் மண்டிக்கிடக்கிறது. அதனுல் இருளையும் சிவமாகக்கருதுகிறது.

ஆயின் இவை யாவுமே சிவமல்ல, ஏன்? உரு என்பது கண்ணுல் காணத்தக்கது. நம்முடைய கண்ணே மண்ணுப் பொருள் ஆயிற்றே. அத்தகைய மண்ணுப் பொருளாகிய கண்ணுல் காணப்படும் பொருள் எங்ஙனம் சிவமாக ஆக இயலும்? இனி, காண இயலாத அருவை சிவமென்று சொல்லுதலும் காணுமையினுல் பொருத்தமன்று. ஒளியும் மனிதன் கண்ணுக்குப் புலனுகும் தன்மைத்து. அதனுல் அதுவும் சிவமன்று. வெளியும் அருவமாகும்; இருள் பொருளை விளக்கும் தன்மைத்து அன்று. எனவே இவையும் சிவமல்ல.

எனவே சிவனை நாம் இங்ஙனம் அரு உருவப் பொருளால் அறிய இயலாது. அறிவினுல்தான் உணர்தல் வேண்டும்.

"இயன்ற எல்லாம் பயின்று அகத்து அடக்கி" நிற்கும் சிவத்தை அறிவினுல் அடைதல் வேண்டும். இவ்வுலக மயக்கத்திலிருந்து விடுபட்டு, இப் பிரபஞ்ச மாயைச் சேற்றிலிருந்து அறிவாகிய ஊன்றுகோலின் துணைகொண்டு ஆன்மா சிவத்துடன் ஐக்யமாதல் வேண்டும்.

இக்கருத்தை இவ்வெண்பா உணர்த்திற்று.

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 16, இதழ் 3-ன் தொடர்ச்சி]

II

THIRUNAVUKKARASU SWAMI

(More commonly referred to as APPARSWAMI)

55. வெந்தநீறருங்கலம்விரதிகட்கெலா
மந்தணர்க்கருங்கலமருமறையாறங்கந்
திங்களுக்கருங்கலந்திகழுநீண்முடி
நங்களுக்கருங்கலநமச்சிவாயவே.

55. For men who all renounce, 'tis glory true
To wear the sacred ash. For Brahmans pure
The Vedas and Vedangas are their pride.
The white moon's glory is to shine serene
On the long locks of Siva, while for us
True glory is to cry 'Hail, Siva, hail.'

(தொடரும்)

உ

சிவ சிவ

திருத்தணிகையிற் புனற்பந்தர் நிதி சேமவைப்பு ரூபா 6,000

முருகப்பெருமான் எழுந்தருளியுள்ள மலைக் கோயில்களுள் சிறந்ததென்பது,

‘விரையி டங்கொளும் போதினுள் மிக்கபங் கயம்போல்
திரையி டங்கொளும் போதினுள் சிறந்தகங் கையைப்போல்
தரையி டங்கொளும் பதிகளிற் காஞ்சியந் தலம்போல்
வரையி டங்களிற் சிறந்ததித் தணிகைமால் வரையே’

என்று கந்தபுராணத்துக் குறிக்கப்பெற்றதும்,

‘ஐந்துநாள் இருந்து வழிபடுவோர் நினைத்த போகங்கள் நிரம்பப் பெற்று வீடுபேறடைவர்’ என்று முருகப்பெருமான் உரைத்த தலமாகியதும்,

‘செங்கண் வெய்யசூர்ச் செருத்தொழி லினுஞ்சில வேடர்
தங்க ளிற்செயும் செருத்தொழி லினுந்தணிந் திட்டே’

முருகப்பெருமான் இருத்தலின் ‘செருத்தணி’ என்று பெயர் பெற்றதும்,

‘சேயிடை யிருந்து கேட்பினும், தொழினும், செப்பினும் சித்தம் வைத்திடினும், வதிதலாதிகள் செய்திடினும்’ இருவினை நீங்கச் செய்யும் பெருமையுடையதும்,

திறத்தமிழ்க் குயர்த்திசைச் சிறப்புடைத் திருத்தணி, தமிழ்த்ரயம் நீடும் திருத்தணி, அழகு திருத்தணிமலை, ஏரணி செருத்தணி, இமையவர் பணி திருத்தணி, தவமுனிக்கணத்தவர் மதுமலர் கொடுபணி திருத்தணிப்பதி, எத்திக்கும் உற்றபுகழ் வெற்றித் திருத்தணி, திருப்புகழ் ஓதும் கருத்தினர் சேரும் திருத்தணி, புவிக்குயிராம் திருத்தணி—என்று அருணகிரிநாதர் புகழ்ந்தோதும் சிறப்புடையதும் ஆன திருத்தணிகை எனும்

திருத்தலத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவில் புனற் பந்தர் தருமம் நடத்துதற் பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இத்தருமம் நிறுவப்பெற்றது. இது 'திருத்தணிகையில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுப் புனற்பந்தர் நிதி' எனப் பெயர் பெறும்.

2. இதற்குரிய சேமவைப்பு ரூ. 6,000 (ரூபா ஆறுயிரம்). இது ஆண்டொன்றுக்கு 3% வட்டி தரக்கூடிய அரசியல் கடன் தாள்களில் முதலீடு செய்யப் பெற்றுள்ளது. 3% கன்வர்ஷன் லோன் ஆப் 1946 சர்க்கார் கடன் பத்திரம் எண் சிஏ. 244306 - ரூ. 5000, சிஏ. 243566 - ரூ. 1000 ஆக ரூ. 6000. இது நம்மாலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்களாகவும் பரிபாலிக்கப் பெற்று வரும்.

3. இதுவரையிலும் நம்மால் பின்வரும் தலங்களில் புனற் பந்தர் தருமம் நடத்த நிதிகள் நிறுவப்பெற்றுள்ளன:–

	முதற்பொருள்
1. திருப்பனந்தாளில் அப்பூதியடிகள் நினைவுத் தண்ணீர்ப் பந்தர் நிதி	ரூ. 3500
2. திருவாப்பாடியில் சண்டேசுவர நாயனார் ஷ	ரூ. 3500
3. ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் தண்ணீர்ப்பந்தர் நிதி	ரூ. 3500
4. மணிக்குடியில் கடவூர்க்கலயர் புனற்பந்தர் நிதி	ரூ. 3500
5. தத்துவாஞ்சேரியில் திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தர் நிதி	ரூ. 3500
6. சுவாமிமலையில் அப்பர் புனற்பந்தர் நிதி	ரூ. 3500
7. திருச்செந்தூரில் ஸ்ரீ செந்திலாண்டவன் புனற் பந்தர் நிதி	ரூ. 3500
8. திருப்பரங்குன்றத்தில் ஸ்ரீ சோமசுந்தரக்கடவுள் தண்ணீர்ப் பந்தர் தரும நிதி	ரூ. 4000
9. சிதம்பரத்தில் திருநீலகண்ட நாயனார் நினைவுத் தண்ணீர்ப் பந்தர் நிதி	ரூ. 3500

		முதற்பொருள்
10.	வைத்தீசுவரன் கோயிலில் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் நினைவுத் தண்ணீர்ப் பந்தர் தரும நிதி	ரூ. 4000
11.	திருவண்ணுமலையில் புனற்பந்தர் நிதி	ரூ. 3500
12.	பழனியில் புனற்பந்தர் நிதி	ரூ. 5000
13.	காவிரிப்பூம்பட்டினத்தில் புனற்பந்தர் நிதி	ரூ. 5000
14.	திருக்கழுக்குன்றத்தில் புனற்பந்தர் நிதி	ரூ. 5000
15.	இராமேசுவரம் ஸ்ரீ காசிமடம் புனற்பந்தர் வருடச் செலவு ரூ. 150	
16.	இராமேசுவரம் கந்தமாதன பர்வதம்-புனற்பந்தர் வருடச்செலவு ரூ. 110	
17.	திருபுவனம்-புனற்பந்தர் வருடச்செலவு ரூ. 120	

ஷை 17 தலங்களில் புனற்பந்தர் தருமம் ஆண்டுதோறும் நம்மால் நடத்தப்பெற்று வருவது போல, இச்சேமவைப்பினின்று கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு தொண்டை நாட்டில், முருகப்பெருமான் மலைமேல் கோயில் கொண்ட தலமாகிய திருத்தணிகை என்னும் தலத்தில், நாம் குறிப்பிடும் ஓர் இடத்தில், சித்திரை, வைகாசி மாதங்களில் தண்ணீர்ப்பந்தல் தருமம் ஆண்டுதோறும் நடத்தப்பெற்று வரும்.

4. இது வேறு எம்முறையிலும் மாற்றியமைக்கப்பெற மாட்டாது.

5. இச் சேமவைப்பு நம் பேரிலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும் இருந்துவரும். இம் முதற்பொருள் அரசியலாரால் திரும்பி அளிக்கப்பெறின் அதிக வட்டி தரக்கூடிய கடன் தாள்களில் முதலீடு செய்யப்பெறும்.

திருப்பனந்தாள்
1—11—63 } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

Registered at Tiruvadamarudhur, ub Registrar's office, on 1-11-63 as No.44 of 1963 of Book 4, Volume 50, pages 218 to 221

கலைக்கோயிலில் வரப்பெற்றுக்கொண்ட புத்தகங்களின் விபரம். (தொடர்ச்சி)

தொடர் எண்	புத்தகத்தின் பெயர்	ஆசிரியரின் பெயர்
10502	அருணகிரியார் குருபரர் அறிவுரைகள்	சாமி சிதம்பரனுர்
10503	திருப்பாவை (ஒரு புதிய திறவுகோல்)	பி. ஸ்ரீ.
10504 & 5	திருவெம்பாவை (ஒரு புதிய வழிகாட்டி)	பி. ஸ்ரீ.
10506	திருமுறைமணிகள்	கிருபானந்தவாரி
10507	ஸ்ரீ கமலாம்பிகா மகாத்மியம் நவா வரண கீர்த்தனை விமர்சனத்துடன்	ந. சுப்பிரமணிய அய்யர்
10508	தமிழ்ப்பெருவள்ளல்	வித்வான் திரு. மு. அருணசலம் பிள்ளை
10509	தமிழர் செல்வம்	ஆ. வ. இராமநாதன் செட்டியார் எம். ஏ.
10510	கிருஸ்தவத் தமிழ்த் தொண்டர்	ரா. பி. சேதுப்பிள்ளை B. A., B. L.
10511	வித்வான் தேர்வு வினவிடை (எண் 1) தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம் பூரணம்	கா. ம. வெள்ளைவாரணம்
10512	தமிழ் மொழியின் வரலாறு	வி. கோ. சூர்ய நாராயண சாஸ்திரிகள்
10513	நவீன காலச்சரித்திரம்	K. கோவிந்தாச்சாரியார்
10514	திருநாவுக்கரசு தேவர் திருஏகாதசமாலை மூலமும் உரையும்	ரா. சண்முக சுந்தரச் செட்டியார்

(தொடரும்)

திருப்பனந்தாள் – ஸ்ரீ காசி மடம்

‘திருமுறை வெளியீடுகள்’

			ரூ. பை.
1	விநாயகர் திருமுறை (அச்சில்)	...	
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு)	...	3 50
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம்	...	3 00
4*	திருஞானசம்பந்தர் தேவாரம் (மூலம் மட்டும் புதிய பதிப்பு)	...	2 75
5*	திருநாவுக்கரசர் தேவாரம் ,,	...	2 00
6*	சுந்தரர் தேவாரம் ,,	...	1 30
7*	திருவாசகம் ,,	...	0 56
8*	திருக்கோவையார்–பேராசிரியர் உரையும் பழைய உரையும் (புதிய பதிப்பு)	...	2 90
9	ஒன்பதாம் திருமுறை–திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் தெளிவுரை	...	1 50
10	,, ,, மூலம் மட்டும்	...	0 56
11	திருமந்திரம் (புதிய பதிப்பு)	...	2 25
12	பதினோருந்திருமுறை (புதிய பதிப்பு) ,,	...	1 50
13	பெரியபுராணம் (மூலம்மட்டும்)	...	3 00
14	பெரியபுராணம் உரை நடை	...	2 00
15	திருத்தொண்டர் புராண சாரம்	...	0 40
16	அகத்தியர் தேவாரத் திரட்டு (அச்சில்)		
17	திருவிளையாடற் புராணம் மூலம் மட்டும்	...	3 00
18	திருவிளையாடற் புராணம் உரை நடை	...	2 25
19	கந்தபுராணச் சுருக்கம் (மூலம் மட்டும்)	...	1 75
20	கந்த புராணம் – முதல் மூன்று காண்டங்கள் மூலம் மட்டும்	...	2 75
21	,, யுத்த தேவ காண்டம் ,,	...	2 00
22	,, தக்ஷகாண்டம் ,,	...	1 50
23	கந்தபுராண உரைநடை ,,	...	3 00
24	திருக்குறள்-அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழி பெயர்ப்பும்	...	1 50
25	திருக்குறள்-பொருட்பால் ,,	...	2 50
26	திருக்குறள் – காமத்துப்பால் ,, ஷெ 24. 25, 26. திருக்குறள் 3 புத்தகமும்	...	4 00
27	திருக்குறள் மூலமும் குறிப்புரையும்	...	0 75
28	தாயுமான சுவாமிகள் பாடல் குறிப்புரை	...	1 25
29	அம்மையார் அற்புதத் திருவந்தாதி (புதிய பதிப்பு)	...	0 25
30	திருக்கைலாய ஞானவுலா – உரையுடன்	...	0 50
31	கந்தர் அலங்காரம் குறிப்புரையுடன்	...	0 25
32	கந்தரனுபூதி மூலம்	...	0 13
33	கந்தரனுபூதி தெளிவுரை	...	0 35
34	கந்தர்கலி வெண்பா - ஆங்கிலம் ஹிந்தி மொழிபெயர்ப்புகளுடன்	...	0 37
35	கந்தர்கலி வெண்பா மூலம் மட்டும்	...	0 10
36	கந்தர்கலி வெண்பா மூலமும் உரையும்	...	0 37
37	நீதிநெறி விளக்கம் - ஆங்கிலமும் ஹிந்தியும்	...	0 50
38	சகலகலாவல்லிமாலை ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது	...	0 06

Under No. R. No. 1485/57.

39	முதுமொழி மேல் வைப்பு (குறிப்புரையுடன்) ...	0 75
40	திருவுசாத்தானக் கல்லெழுத்துக்கள் ...	0 37
41	திருக்குறள்-பொருட்பால்-பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம் ...	0 13
42	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா-மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்-மதுரைக் கலம்பகம்-நீதிநெறி விளக்கம்-மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை-மதுரை மீனாட்சியம்மை குறம் ...	2 75
43	திருவாரூர் நான்மணிமாலை-முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்	1 25
44	சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட்கோவை தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை ...	1 00
45	பண்டார மும்மணிக் கோவை-காசிக்கலம்பகம் சகலகலாவல்லி மாலை ...	1 00
46	சிதம்பரச் செய்யுட்கோவை ...	.0 75
47	முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் ...	0 50
48	குமரகுருபர சுவாமிகள் ஜீவிய சரித்திரப்பட விளக்கங்களும் ...	0 50
49	திருக்கயிலைத் திருமுறை ...	0 37
50	திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும் ...	0 19
51	செந்திலாண்டவன் மகிமை ...	0 13
52	திருக்குறள்-உரைக்கொத்து-அறத்துப்பால் 3-ம் பதிப்பு ...	1 37
53	டி டி பொருட்பால் 2-ம் பதிப்பு ...	2 75
54	டி டி காமத்துப்பால் டி ...	1 20
55	அபிராமி அந்தாதி-தெளிவுரையுடன் ...	0 50
56	மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் (குறிப்புரையுடன்) ...	0 50
57	திருவாரூர்-திருப்பனுவல்கள் ...	0 10
58	திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி ...	0 10
59	பழமொழித்திருமுறை ...	0 25
60	திருவாரூர் நான்மணிமாலை ...	0 50
61	Hymns and Proverbs ...	0 10
62	அப்பர்விழா வெளியீடு ...	0 25
63	நவக்கிரகமாண்பு ...	0 25
64	குமரகுருபரர் வரலாறும், அற்புதத்தேவாரத் திரட்டும் ...	0 30

மேலே கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்.
   "தியாகராஜ விலாசம்" 53. பிள்ளையார் கோயில்தெரு.
   திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை-5

குறிப்பு:- • இக்குறியிடப் பெற்றவற்றின் விற்பனைத் தொகை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற பன்னிரு திருமுறை பதிப்பு நிதியைச்சாரும். மற்ற நூல்களில் திருக்குறள் உரைக்கொத்து (எண் 52, 53, 54) தவிர்த்து எஞ்சியவற்றின் விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச்சாரும்.

அச்சிட்டது:- குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் -65.